# குழந்தை தத்தெடுப்பு

## CHILD ADOPTION

INDIAN COUNCIL FOR CHILD WELFARE TAMIL NADU

unicef

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | குழந்தை தத்தெடுப்பு<br>(ஆதாரநூல்) |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2018 |
| உருவாக்கம் | : | இந்திய குழந்தைகள் நலச்சங்கம், தமிழ்நாடு<br>எண். 5, 3வது பிரதான சாலை மேற்கு, ஷெனாய் நகர், சென்னை 30<br>Ph : +91-44-26282833 / 26212550 மின்னஞ்சல்: iccwtn@gmail.com<br><br>திருமதி. சந்திராதேவி தணிகாசலம்,<br>துணைத்தலைவர், இந்திய குழந்தைகள் நலச்சங்கம், தமிழ்நாடு |
| வடிவமைப்பு | : | பி.எஸ்.எஸ்.ராவ்<br>ஸ்பெக்ட்ரம் கிரா.ஃபிக்ஸ் |
| அச்சகம் | : | சாய் பிரிண்ட் ஹவுஸ் |

# பொருளடக்கம்


பக்கம்

அத்தியாயம் - 1
குழந்தை தத்தெடுப்பு: 13

அத்தியாயம் - 2
தத்து எடுக்க தகுதிவாய்ந்த நபர்கள் 25

அத்தியாயம் - 3
இந்திய குழந்தைகளின் தத்தெடுப்பு - வழிமுறைகள் 31

அத்தியாயம் - 4
குழந்தை தத்தெடுத்தலில் முக்கிய பங்காற்றும் நிறுவனங்கள் 47

அத்தியாயம் - 5
தத்தெடுப்பிற்கு உகந்த சட்டங்கள் 57

அத்தியாயம் - 6
நீதிமன்ற ஆணை 65

திரு.ஆர்.லால்வேனா, இ.ஆ.ப.,
ஆணையர்,
சமூகப் பாதுகாப்புத் துறை,

எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லீஸ்,
சென்னை – 600 010.
தொலைபேசி:044–26425082/26426421
நிகரி: 044–26612989
மின்னஞ்சல்: dsd.tn@nic.in



## முன்னுரை

தனிநபர் மற்றும் சமூக பொருளாதார காரணங்களால் குழந்தைகள் சொந்த பெற்றோர்களின் பராமரிப்பில் வளர இயலாது ஆதரவற்ற/கைவிடப்பட்ட/ ஒப்படைக்கப்பட்ட நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இந்நிலையில் உள்ள குழந்தைகளுக்கு தகுதியான பெற்றோர்களை இனம் கண்டு அவர்கள் குடும்ப சூழ்நிலையில் வளர வழிவகை செய்ய வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். மேலும் மழலையர் இல்லா தம்பதியருக்கு தத்தெடுத்தல் ஒரு வரமாகவும் அமைகிறது. ஆரம்பநிலையில் குழந்தைகளுக்கு தேவையான பராமரிப்பினை அளித்தல், முன்னிலைபடுத்தப்பட்ட குழந்தைகளின் மீது கவனம் செலுத்தி தத்து வழங்க ஆவணம் செய்தல், மிகவும் தகுதியான பெற்றோரை தெரிவு செய்தல் ஆகிய செயல்பாடுகளில் சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள், குழந்தை நல குழுமங்கள் சிறப்பான பங்களிப்பினை அளிக்க இயலும். மைய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் தத்தெடுப்பு ஒழுங்குமுறை விதிகள் 2017–ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு குழந்தைகள் தத்தெடுப்பு வழிமுறைகளை தமிழ் மொழியில் கையேடாக இந்திய குழந்தைகள் நல சங்கம் யுனிசெப் நிதி உதவியுடன் வெளியிட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.

இக்கையேடு தமிழ் மொழியில் எளிய நடையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் இளைஞர் நீதி சட்டத்தின் பல்வேறு பணியாளர்கள் நன்கு கற்றறிந்து குழந்தைகளின் தத்தெடுப்பினை மாநிலத்தில் மேம்படுத்த வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக பொதுமக்கள், தத்தெடுக்க விழையும் பெற்றோர்கள், குழந்தை நல குழுக்கள், சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள், குழந்தைகள் இல்லங்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள், நன்னடத்தை அலுவலர்கள் போன்ற பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயனுள்ளதாக அமையுமென நம்புகிறேன். இக்கையேட்டினை தயாரித்த தமிழ்நாடு, இந்திய குழந்தைகள் நல சங்கத்தினை உளமாற பாராட்டுகிறேன்.

சமூக பாதுகாப்பு ஆணையர்

# அணிந்துரை



"ஒவ்வொரு குழந்தைக்கும் முழுமையான தடையற்ற வளர்ச்சியை அடைவதற்கான உரிமை உண்டு எனில் அவர்கள் அனைவரும் மகிழ்ச்சி, அன்பு மற்றும் புரிதல் நிரம்பியுள்ள ஒரு குடும்ப சூழலில் வாழ வேண்டும்"

*- குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை*

குழந்தைகளுக்காக வேலை செய்யும் அனைவருமே, மேலே குறிப்பிட்ட வழிகாட்டுதலின் அடிப்படையில்தான் பணியை செய்கிறார்கள். இந்திய குழந்தைகள் நலச்சங்கம் - தமிழ்நாடு, நிறுவனம் இந்த கொள்கையை முழுமையாக ஏற்றுக் கொண்டு பணி புரிந்து வருகிறது.

ஆதரவற்ற எல்லா குழந்தைகளையும் (பெற்றோரால் கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட அனைத்து குழந்தைகள்) தகுதி வாய்ந்த ஒரு குடும்பத்துக்கு தத்து கொடுத்தல் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைவதுடன், இதன் மூலம் அவர்களது குழந்தையாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த குடும்பத்தில் ஒருவராக இந்த குழந்தை தகுந்த பாதுகாப்பு மற்றும் பராமரிப்புடன் வளர்கிறது. இருப்பினும் தத்து கொடுத்தல் மிகுந்த கவனத்துடன் செய்து முடிக்க வேண்டிய ஒரு செயலாகும். இதில் குழந்தைகளுக்கான உரிமைகளும், குழந்தையை ஈன்றெடுத்த பெற்றோர் மற்றும் தத்து பெற்றோர் ஆகிய அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். சந்தோஷமாகவும் / வெற்றிகரமாகவும் குழந்தை தத்து கொடுத்தல் நிகழ்ந்தாலும், சரியான முறையில் தத்து கொடுக்க தவறியதால் ஏற்படும் குளறுபடிகளைப் பற்றி அவ்வப்போது நமக்கு தெரிய வருகிறது. இவ்வாறு தவறாக நடக்கும் தத்து கொடுத்தலை தவிர்ப்பதற்காக அநேக முன்னேற்பாடுகளும் செய்யப்படுகின்றன. அரசின் விதிமுறைகள் மற்றும் சர்வதேச வழிகாட்டு நெறிகளின் மூலமாக தத்தெடுப்புகளில் ஏற்படும் தவறுகளை தடுக்க முடிகிறது.

இந்திய குழந்தைகள் நலச்சங்கம் - தமிழ்நாடு நிறுவனம் 1981-ல் பாம்பே வழிகாட்டு நெறிகளை (Bombay Guidelines 1981) உருவாக்கிய ஒரு குழுவில் முக்கிய பொறுப்பேற்றது. இந்த வழிகாட்டு நெறிகளே 1984-ல் உச்சநீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட வழிமுறைகளுக்கும் ஆதாரமாக இருந்தது. இதுமட்டுமல்லாது மத்திய அரசாங்கத்தின் தத்து கொடுத்தல் சம்பந்தமாக வெளிவந்த வழிகாட்டு நெறிகளின் விதிமுறைகளை உருவாக்குதலில் இந்திய குழந்தைகள் நலச்சங்கம் - தமிழ்நாடு, சிறப்பாக பங்களித்தது.

தற்பொழுது 2017-ல் வெளிவந்த மத்திய தத்தெடுப்பு வள அதிகார மையத்தின் (Central Adoption Resource Authority –CARA) வழிகாட்டு நெறிமுறைகளின் படி, பெற்றோரால் கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளின் தத்தெடுப்பில் குழந்தை நல குழு, மாவட்ட குழந்தை பாதுகாப்பு மையம், சிறப்பு தத்து நிறுவனம், காவல்துறை, சைல்டு லைன் -1098 (CHILDLINE) ஆகிய அனைவருக்கும் முக்கிய பொறுப்பான பங்களிப்புகள் உண்டு. இவை அனைத்தும் எளிய தமிழ் நடையில் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த கையேடு, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகில் உள்ள அலுவலர்கள் மற்றும் தத்து கொடுத்தலில் ஈடுபட்டிருக்கும் எல்லா அலுவலா்களுக்கும் உதவியாக இருக்கும் என நம்புகிறோம்.. மேலும் இம்முறையில் இணையும் தத்து பெற்றோர்கள் குழந்தையை சிறப்பாக சீராட்டி வளர்க்கக்கூடிய தத்து குடும்பங்களை ஒன்றிணைக்கவும், அவர்களுடைய உறவுகள் மேம்படுத்தவும் இக்கையேடு உதவும் என்று நம்புகிறோம்.

இக்கையேட்டினை சீரிய முறையில் தொகுத்தளித்த திருமதி. சந்திராதேவி தணிகாசலம் துணைத்தலைவர், இந்திய குழந்தைகள் நலச்சங்கம் - தமிழ்நாடு அவர்களுக்கும், இந்த முயற்சிக்கு நிதி ஆதாரம் அளித்த யூனிசெப் நிறுவனத்திற்கும் எங்களது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

குழந்தைகளின் பணியில்

Andal Damodaran

திருமதி. ஆண்டாள் தாமோதரன்
தலைவர்,
இந்திய குழந்தைகள் நலச்சங்கம்-தமிழ்நாடு

# ஒரு அறிமுகம்

## முன்னுரை

ஒரு குழந்தையின் உடல், மன மற்றும் சமூக வளர்ச்சியில் மிகப் பெரிய பங்கு வகிப்பது அது வளரும் குடும்பமே. அன்பும் ஆதரவும் நிறைந்த ஒரு குடும்பத்தில் கிடைக்கக் கூடிய நல்ல அனுபவங்கள் வாழ்நாள் முழுவதும் அதற்கு உதவிகரமாக அமைகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

ஆகவே குடும்ப பரமாரிப்பு மறுக்கப்பட்டு ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்ட குழந்தைகள், குழந்தை இல்லங்களில் வளர்வதைவிட, ஒரு மாற்று குடும்பத்தில் வளர்க்கப்படுவதே சிறந்த புனர் வாழ்வாக அமையும் என்பது உலகெங்கிலும் உள்ள சமூக மற்றும் உளவியல் நிபுணர்களின் கருத்தாகும்.

மாற்று குடும்பம் என்பது ஒரு குறுகிய கால வளர்ப்பு உரிமையாகவும் (Foster Care) இருக்கலாம். அல்லது சட்டரீதியான தத்தெடுப்பாகவும் இருக்கலாம். முக்கியமாக பெற்றோர் யார் என்பதே அறியப்படாத சூழ்நிலையில் உள்ள அல்லது பெற்றோரால் ஒப்படைக்கப்பட்ட ஒரு குழந்தைக்கு சட்டரீதியான தத்தெடுப்பே மிக உகந்த புனர்வாழ்வாக அமையும்.

சட்டரீதியாக தத்தெடுத்தல் என்பது ஒரு குழந்தைக்கு குடும்ப பராமரிப்பு மட்டுமின்றி, தன்னை தத்தெடுத்த பெற்றோரின் வயிற்றில் பிறந்த ஒரு குழந்தைக்கு ஈடான அனைத்து உரிமைகளும் கிடைக்க வழி உண்டு. அப்பெற்றோரின் தனிப்பட்ட சொத்துக்கள், குடும்ப வழி சொத்துக்கள், குடும்ப அங்கத்தினர் என்ற அந்தஸ்து போன்ற பல உரிமைகள் அக்குழந்தையை வந்தடையும்.

மேலும் "குழந்தை தத்தெடுப்பு" என்பது நம் இந்திய சமுதாயத்தில் வாழையடி வாழையாக பழக்கத்தில் இருந்து வந்த ஒன்றாகும்.

நம்முடைய பழைய இந்து சட்டத்தின் வாயிலாக (Old Hindu Law) குழந்தை இல்லாத பெற்றோர், முக்கியமாக ஆண் வாரிசு இல்லாத குடும்பங்கள், ஒரு ஆண் பிள்ளையை சட்டரீதியாக தத்தெடுப்பது என்பது பல நூற்றாண்டு காலமாக நடைபெற்று வந்த செயலாகும்.

ஆனால் அக்காலகட்டத்தில் தத்தெடுப்பு என்பது பெரும்பாலும், குடும்ப பெயர் தொடரவும், பெற்றோருக்கு ஈமக்கடன் செய்யவும் என்று, ஒரு ஆண் வாரிசை தத்தெடுப்பதற்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்தது. தங்கள் சாதி, மதம் சார்ந்த, பெற்றோர் உள்ள உறவினர் குழந்தைகள் மட்டுமே தத்தெடுக்க உகந்த குழந்தைகளாக கருதப்பட்டது. பெண் குழந்தைகள், பெற்றோர் யார் என்று தெரியாத ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோர் தத்தெடுக்க உகந்த குழந்தைகளாக கருதப்படவில்லை.

ஆனால் 1955-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு' சட்டத்தின் வாயிலாக இத்தகைய தடைகள் நீக்கப்பட்டன. இருந்த போதும் அக்கால கட்டத்தில் பெரும்பலான பெற்றோரிடையே, தங்கள் சாதி, மதத்தில் பிறந்த குழந்தையை மட்டுமே தத்தெடுக்க வேண்டும் என்னும் மனப்பான்மை இருந்த காரணத்தால், பெற்றோர், மற்றும் என்ன சாதி என்று அறியப்படாத ஆதரவற்ற குழந்தைகள் பெரும்பாலும், அனாதை ஆசிரமத்தில் வளர்வதைத் தவிர வேறு வாய்ப்பு இல்லை என்ற நிலைப்பாடே இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில், எழுபது, எண்பதுகளில், பல அயல்நாட்டவர், இந்தியா வந்து இவ்விதம் இல்லங்களில் வசிக்கும் குழந்தைகளை தத்தெடுக்க முன் வந்தனர், ஆனால் அத்தகைய தத்தெடுப்பிற்கு உரிய சட்டங்களோ, நடைமுறை விதிகளோ இல்லாத காரணத்தால் நீதிமன்றங்கள் அவர்களுக்கு 'பாதுகாவலர்' (Guardian) என்ற அந்தஸ்தை வழங்கி, குழந்தைகளை அயல் நாட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கின.

இவை அனைத்தும் நல்ல நோக்குடன் நடைபெற்ற போதும், இது குறித்து பல சந்தேகங்கள் எழாமல் இல்லை. இத்தகை சூழலில், 'லஷ்மிகாந்த் பாண்டே' என்னும் ஒரு வழக்கறிஞர், உச்சநீதிமன்றத்தின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்றார். உச்ச நீதிமன்றமும் இதை ஒரு 'நீதிபேராணை மனுவாக' (Writ Petition) அங்கீகரித்து, தீவிரமாக விசாரணை செய்து, அயல் நாட்டு மற்றும் உள் நாட்டு தத்தெடுப்புகளில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை விதிகளை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கூடிய ஒரு தீர்ப்பை வழங்கியது.

'லஷ்மிகாந்த் பாண்டே (எதிர்) மத்திய அரசு' என்னும் இந்த வழக்கின் வாயிலாக உச்சநீதிமன்றம் 1984 முதல் 2000 ஆண்டு வரை வழங்கிய தீர்ப்புகள் அனைத்தும் இந்திய தத்தெடுப்பிற்கு 'ஒரு மைல் கல்' என போற்றப்படுகிறது.

இந்த தீர்ப்புகள் அனைத்தும் பெற்றோரால் ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை, உள்நாட்டிலோ அல்லது அயல்நாட்டிலோ தத்து கொடுக்கும் போது அத்தகைய குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், மற்றும் குழந்தைகளின் சீரிய நன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்னும் நோக்குடனே சொல்லப்பட்டன.

## உச்சநீதிமன்ற தீர்ப்புகள் வாயிலாக சொல்லப்பட்ட முக்கிய கருத்துக்கள்:

1. தனிப்பட்ட நபர்கள் அல்லது அங்கீகாரம் இல்லாத குழந்தை இல்லங்கள் இது போன்ற குழந்தைகளை தத்து கொடுக்க இயலாது.

2. அரசின் சிறப்பு அங்கீகாரம் பெற்ற தத்து நிறுவனங்கள் மட்டுமே ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட குழந்தைகளை தத்து கொடுக்க முடியும்.

3. அயல்நாட்டவர் தனிப்பட்ட முறையில் நேரில் வந்து இந்திய குழந்தைகளை தத்தெடுக்க அனுமதி இல்லை.

4. இந்திய அரசின் அங்கீகாரம் பெற்ற அயல்நாட்டு தத்து நிறுவனங்களை அணுகி, அவர்கள் நடத்தும் குடும்ப ஆய்வு அறிக்கை மூலம், அவர்கள் தத்தெடுக்க உகந்த பெற்றோர்தான் என அறிவிக்கப்பட்ட பிறகே தத்தெடுக்க முன் வர வேண்டும்.

5. மத்திய அரசு, நாடெங்கிலும் நடைபெறும் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு தத்தெடுப்புகளை முறைப்படுத்த பொறுப்பேற்கும் வகையில் ஒரு 'மத்திய தத்து வள ஆதார மையத்தை' (Central Adoption Resource Authority) உருவாக்குதல் வேண்டும்.

6. தத்தெடுக்க அனுமதிகோரி மனு தாக்கல் செய்யப்படும் போது, நீதிமன்றங்கள், ஒரு தனிப்பட்ட நிறுவனத்திடம், அந்த தத்தெடுப்பை குறித்த ஒரு ஆய்வு அறிக்கை கேட்டு பெறுதல் வேண்டும். இதற்கென, 'இந்திய குழந்தைகள் நலச்சங்கம்' (Indian Council for Child Welfare) அல்லது 'இந்திய சமூக நலச்சங்கம்' (Indian Council for Social Welfare) என்ற இரு தேசிய அமைப்புகள் மற்றும் அவற்றின் மாநில கிளை ஸ்தாபனங்களின் சேவையை பயன்படுத்தலாம் என்றும் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

மேற்சொன்ன தீர்ப்பிற்கு பின்னர் இந்திய தத்தெடுப்பில் பல நல்ல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன அவற்றில் முக்கியமானவை கீழ் வருமாறு:

- உலக அளவில் குழந்தைகளின் அயல்நாட்டு தத்தெடுப்பை முறைப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையால் 1993-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'ஹேக் மாநாட்டு ஒப்பந்த விதிமுறைகளில்' 2004-ம் ஆண்டு இந்தியா கையொப்பம் இட்டு அயல்நாட்டு தத்தெடுப்புகளை மேலும் முறைப்படுத்தியது.
- இந்துக்களைத் தவிர இதர மதத்தைச் சார்ந்தவர்கள் தத்தெடுக்க ஏதுவான சட்டங்கள் நம் நாட்டில் இல்லை என்ற குறை நீங்கி தற்பொழுது 'இளைஞர் நீதி குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2015' என்னும் சட்டத்தின் வாயிலாக அனைத்து மதத்தினரும் தத்தெடுக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசும், உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு தத்தெடுப்புகள் குறித்த நடைமுறை விதிகளை உருவாக்கி, அவ்வப்போது அவற்றை புதுப்பித்த வண்ணம் உள்ளது. 'தத்தெடுப்பு விதிமுறை 2017' (Adoption Regulation -2017) எனப்படும் ஒரு விரிவான ஆவணம் தற்பொழுது அமுலில் உள்ளது.
- நம் இந்திய பெற்றோரும் சாதி, மத, இன வேறுபாடுகளின்றி ஆதரவற்ற குழந்தைகளை முக்கியமாக பெண் குழந்தைகளை தத்தெடுக்க விருப்பத்துடன் அதிக அளவில் முன்வருகின்ற நிலையும் தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

அத்தியாயம்



# 1

# குழந்தை தத்தெடுப்பு

ஒரு குழந்தையை தத்தெடுப்பதின் மூலம் உலகத்தை மாற்றிவிட முடியாது. ஆனால் அக்குழந்தையை பொருத்தமட்டில் அதன் உலகமே முற்றிலும் மாறிவிடும்.

# குழந்தை தத்தெடுப்பு

ஒரு இந்திய குழந்தையை தத்தெடுக்க தற்போது அமுலில் உள்ள சட்டங்கள் மற்றும் விதி முறைகள் யாவை என்பதனை கீழே காணலாம்:-

**ஒரு குழந்தையை தத்தெடுக்க உரிய சட்டங்கள்:**

1. இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டம் - 1956.
   (The Hindu Adoption and Maintenance Act, 1956.

2. இளைஞர் நீதி குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் - 2015.
   Juvenile Justice (Care and Protection of Children) Act-2015

மேற்சொன்ன இரு சட்டங்களும் பொருந்தாத சூழ்நிலையில் உள்ள பெற்றோர், குழந்தையின் பாதுகாவலர் என்ற அந்தஸ்துடன், ஒரு குழந்தையை வளர்க்க கீழே குறிப்பிட்டுள்ள சட்டம் உதவிகரமாக இருக்கும்.

3. பாதுகாவலர் மற்றும் பாதுகாக்கப்படுவோர் சட்டம் 1980
   (Guardian and Wards Act of 1890)

**விதிமுறைகள்:**

- மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ள ‘தத்தெடுப்பு முறைப்படுத்தல் 2017’. (Adoption Regulation -2017) என்னும் ஆவணம்.
- ‘லட்சுமிகாந் பாண்டே (எதிர்) மத்திய அரசு என்னும்’ வழக்கின் வாயிலாக 1984-ம் ஆண்டு முதல் 2000-ம் ஆண்டு வரையிலான உச்ச நீதிமன்ற தீர்ப்புகள்.

குழந்தை தத்தெடுப்பு என்பதை நம் நாட்டை பொறுத்த வரை கீழ் காணும் வகைகளில் பிரிக்கலாம்.







## ஒரு குழந்தையை தத்து கொடுக்கும் முன்னர் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டிய அடிப்படை கொள்கைகள் கீழ்வருமாறு :-

1. ஒரு குழந்தையை, ஒரு பெற்றோருக்கு தத்து கொடுக்க முடிவு எடுக்கும் போது அத்தகைய முடிவு, குழந்தையின் சீரிய நன்மைக்கு முதலிடம் கொடுத்த முடிவாக இருத்தல் அவசியம்.
2. ஒரு குழந்தையை தத்து கொடுக்க முடிவெடுக்கும் போது, அது பிறந்த நாட்டில், கலாச்சார பின்னணியில் வளரும் வகையில், உள் நாட்டு தத்தெடுப்பிற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.
3. அனைத்து தத்தெடுப்புகளும் நம் நாட்டு தத்தெடுப்பு அதிகார மையத்தால் உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு, அவற்றின் இரகசியத்தன்மை காக்கப்படுதல் வேண்டும்.

இனி குழந்தை தத்தெடுப்பிற்கான கட்டுப்பாடுகள் 2017 என்னும் மத்திய அரசு ஆவணத்தின் மூலம் தற்பொழுது அமுலில் உள்ள நடைமுறை விதிகள் அவற்றை அமுல்படுத்த கடமைப்பட்டுள்ள பல அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பணிகள் ஆகியவற்றை விரிவாகப் பார்ப்போம்.

*முதலில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது, தத்து கொடுக்கப்படும் குழந்தைகளின் பின்னணியை பொறுத்தே பெரும்பாலான நடைமுறை விதிகள் அமைந்துள்ளன என்பதாகும்:-*

### இரு குடும்பங்களுக்குள் ஏற்படும் தத்தெடுப்பு :-

- குழந்தையை பெற்ற பெற்றோர், அல்லது அவர்கள் இல்லாத பட்சத்தில் குழந்தையின் இயற்கை பாதுகாவலர் அல்லது சட்டரீதியான பாதுகாவலர் (Natural or a Guardian appointed under the Law) தன்னிச்சையாக முடிவெடுத்து, மற்றொரு தகுதிவாய்ந்த பெற்றோருக்கு தத்து கொடுத்தல். இத்தகைய குடும்ப தத்தெடுப்பில், எத்தகைய குழந்தையும் தகுதி வாய்ந்த குழந்தைதான். இதர அமைப்புகளின் தலையீடு மிகக் குறைவாகவே இருக்கும்.

### பெற்றோரால் கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட ஒரு குழந்தையின் தத்தெடுப்பு:

- பெற்றோரால் ஒப்படைக்கப்பட்டு, ஒரு குழந்தை இல்லத்தில் வளரும் குழந்தை அல்லது பெற்றோரால் கைவிடப்பட்டு குடும்ப பின்னணியே அறியப்படாத சூழலில் உள்ள குழந்தை ஆகியோரை தத்து கொடுப்பது என்பது மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். குழந்தைக்கு எந்த விதத்திலும் இரத்த சம்பந்தமில்லாத மூன்றாம் நபர்களால் கொடுக்கப்படும் இது போன்ற தத்தெடுப்புகளில் அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்கள், நீதிமன்றம் என்று பல அமைப்புகளின் தலையீடுகள் உள்ளன. அத்தகைய தத்தெடுப்புகளுக்கு மிகப்பெரிய அளவிலான விரிவான நடைமுறை விதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றை இனி கீழே காணலாம்.

## பெற்றோரால் கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை தத்து கொடுக்கும் போது ஆற்ற வேண்டிய செயல்பாடுகள் என்ன என்பதனை பார்ப்போம்:

பெற்றோரால் கைவிடப்பட்டு ஆதரவற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு உடன் ஆற்ற வேண்டிய தொண்டுகள் பல. முதலில் அவர்களுக்கு தேவைப்படுவது இருக்க இடம், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, மேலும் அவர்கள் “சட்ட ரீதியாக தத்து கொடுக்க ஏதுவான குழந்தைகள்” என்று அறிவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரே அவர்களை தத்து கொடுக்க இயலும். முதலில் இத்தகைய குழந்தைகளுக்கு பணியாற்ற கடமைப்பட்ட நிறுவனங்களை கீழே காணலாம்.

1. குழந்தை நல குழு (Child Welfare Committee - CWC) : இளைஞர் நீதிச் சட்டம் 2015-ன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இக்குழுவிற்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் குறித்து, முடிவெடுக்கவும் மற்றும் ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் உண்டு. அத்துடன் கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை “சட்டரீதியாக தத்து கொடுக்க தகுதியான குழந்தைகள்” என்று அறிவிக்கும் மிக முக்கிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு.
2. “சைல்டுலைன்-1098” (CHILDLINE) : “1098” என்னும் குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி எண் கொண்ட இந்த மையம் 24 மணி நேரமும் இடர்பாடான அல்லது அபாயகரமான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளை காக்க கடமைப்பட்டது.
3. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (District Child Protection Unit- DCPU) : ஒவ்வொரு மாவட்டத்திலும், குழந்தை பாதுகாப்பு அலகு ஒன்று உண்டு. முக்கியமாக அதன் தலைமை அதிகாரிக்கு, கைவிடப்பட்ட குழந்தைகளின் தத்தெடுப்பில் ஆற்ற வேண்டிய கடமைகள் பல உண்டு.

4. சிறப்பு தத்து நிறுவனம் (Specialised Adoption Agency - SAA) : ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட குழந்தைகளை பராமரிக்கவும், அக்குழந்தைகளின் தத்தெடுப்பிற்கு ஆவன செய்யவும் மாநில அரசின் சிறப்பு அங்கீகாரம் பெற்ற தொண்டு நிறுவனங்கள் “சிறப்பு தத்து நிறுவனங்கள்” என அழைக்கப்படும்.

5. குழந்தை பராமரிப்பு நிறுவனம் (Child Care Institution - CCI) : இளைஞர் நீதிச்சட்டம் 2015-ன் கீழ் அங்கீகாரம் பெற்ற இந்நிறுவனங்கள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை தன் வசம் வைத்து பாதுகாக்க, பராமரிக்க மற்றும் அவர்களின் புனர்வாழ்வுக்கான அனைத்து முயற்சியும் எடுக்க கடமைப்பட்ட நிறுவனங்கள் ஆகும்.

இனி பெற்றோரால் கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை குறித்து மேற்சொன்ன நிறுவனங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் யாவை என்பதனை கீழே பார்ப்போம்.

## கைவிடப்பட்ட குழந்தை (Abandoned Child) :

நம் நாட்டில் அன்று பிறந்த சிசுவில் இருந்து பல இளம் சிறார்கள் வரை, பெற்றோரால் கைவிடப்பட்டு, வீதிகள், குப்பைத் தொட்டிகள் உட்பட பல பொது இடங்களில் ஆதரவற்ற நிலையில் கண்டெடுக்கப்படுவதை நாம் அன்றாட செய்தியாக ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம்.

இத்தகைய சூழ்நிலைக்கு தள்ளப்பட்ட பெற்றோருக்கு தங்கள் குழந்தையையே கைவிட்டு செல்ல பல நியாமான காரணங்கள் இருக்கலாம். அது குறித்து கவலைபடவும், அத்தகைய நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதற்கு, ஆவன செய்வதிலும் அரசு, அரசு சாரா நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகிய அனைவருக்குமே பங்கு உண்டு. இருப்பினும் இது போல் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் யாவை எனபதனை கீழே பார்க்கலாம்.

நிராதரவாக விடப்பட்ட ஒரு குழந்தையை யார் கண்டெடுத்தாலும் கீழ்கண்ட ஏதேனும் ஒரு அமைப்பிற்கு உடன் தகவல் அளித்தல் அவசியம்..

- அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு உடன் தகவல் அளிக்க வேண்டும்.

அல்லது

- Child Line அமைப்பு இருக்கும் இடமாக இருப்பின் 1098 - என்னும் அவசர தொலைபேசி எண்ணை அழைத்து தகவல் சொல்ல வேண்டும்.

அல்லது

- மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் (DCPO)-க்கு அல்லது நன்னடத்தை அலுவலருக்கு அல்லது குழந்தை நல குழுவிற்கு (CWC)-க்கு தகவல் அளித்தல் வேண்டும்.

பொது மக்கள், ஆதரவற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு குழந்தையை மேற்சொன்ன எவருக்கும் தகவல் அளிக்காமல், 24 மணி நேரத்திற்கு மேல் அக்குழந்தையை தங்கள் வசம் வைத்திருக்கும் பட்சத்தில் அது சட்டப்படி தண்டிக்கத்தக்க குற்றமாக கருதப்படும். இளைஞர் நீதிச் சட்டம் 2015-ன் 33வது சட்டப்பிரிவின் படி, ஒருவருக்கு 6 மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ.10,000 வரை அபராதம் அல்லது இரண்டுமே கிடைக்க வாய்ப்புண்டு.

இவ்விதம் ஒரு குழந்தை கண்டெடுக்கப்பட்டு, தங்கள் வசம் ஒப்படைக்கப்பட்ட உடன் மேலே குறிப்பிடப்பட்ட சிறப்பு நிறுவனங்கள் (POLICE, CHILDLINE, DCPU, SAA, CWC) ஆற்ற வேண்டிய பணிகளை பார்க்கலாம்.

## முதற்கட்டம் :-

எந்த அமைப்பின் வசம் குழந்தை ஒப்படைக்கப்படுகிறதோ, அந்த அமைப்பு உடனே அக்குழந்தையின் புகைப்படம், மற்றும் இதர தகவல்களை "கோயாபாயா" என்று அழைக்கப்படும் "காணாமல் போன அல்லது கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு இணைய தளத்தில்" தாமதிக்காமல் பதிவு செய்தல் மிக அவசியம். இச்செயலின் மூலம் குழந்தையை காணாமல் தேடும் பெற்றோர், அல்லது காவல்துறை சார்ந்தவர்கள் ஆகியோர் நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களுக்கு தகவல் போய் சேர வழி கிடைக்கும்.

"கோயா பாயா"-http://khoyapaya.gov.in என்னும் இந்த இணையதளம் மத்திய அரசின் "பெண்கள் மற்றும் குழந்தைகள்" மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் - மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையின் உதவியுடன் இயங்கி வருகிறது. இது நாட்டின் எந்த ஒரு மூலையில் ஒரு குழந்தை காணாமல் போனாலோ அல்லது காணாமல் போன குழந்தை கண்டெடுக்கப்பட்டாலோ உடன் தகவல் பரிமாற்றம் அளிக்கும் ஒரு உன்னதமான இணையதளம் என்று கூறலாம். இதை பற்றிய செய்தி பரவலாக எல்லோருக்கும் தெரிந்திருத்தல் அவசியம்.

## அடுத்தக்கட்டம் :-

- தங்கள் வசம் ஒப்படைக்கப்பட்ட குழந்தையை 24 மணி நேரத்திற்குள் "குழந்தை நல குழு" வசம் ஒப்படைத்தல் அவசியம். குழுமம் கூடாத நேரமாக இருப்பின் யாராவது ஒரு உறுப்பினரின் முன்னிலையில் ஒப்படைக்கலாம்.

- "குழந்தை நல குழு", தங்கள் முன்னிலைக்கு கொண்டுவரப்பட்ட குழந்தை 6 வயதுக்கு உட்பட்ட குழந்தையாக இருப்பின் "ஒரு சிறப்பு தத்து நிறுவனத்திடமும்", 6 வயதிற்கு மேற்பட்ட குழந்தையாக இருப்பின் "ஒரு குழந்தை பராமரிப்பு இல்லத்திடமும்" ஒப்படைக்க ஒரு இடைக்கால ஆணை பிறப்பித்து, குழந்தையை ஒப்படைக்க வேண்டும். மேலும் குழந்தை குறித்த அனைத்து தகவல்களையும் சேகரித்து அறிக்கை சமர்பிக்குமாறு "நன்னடத்தை அலுவலர் அல்லது அங்கீகாரம் பெற்ற சமூக சேவகர்" ஆகியோருக்கு ஆணை பிறப்பித்தல் வேண்டும்.

- மேலும் குழந்தை நல குழு முதலில் எடுக்க வேண்டிய நடவடிக்கை, அக்குழந்தை குறித்த தகவல்கள் "கோயா பாயா" இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட விவரம் கேட்டறிய வேண்டும். இல்லையேல் உடன் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- சிறப்பு தத்து நிறுவனம் - தன் வசம் ஒப்படைக்கப்பட்ட குழந்தையின் புகைப்படம் மற்றும் இதர விவரங்களை, தத்தெடுப்பு இணைய தளத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

- குழந்தையின் பெற்றோரைக் கண்டறிய மற்றொரு முயற்சியாக, செய்தித் தாளில் விளம்பரம் கொடுக்குமாறு "மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலருக்கு" குழந்தை நல குழுமம்

ஆணை பிறப்பித்தல் வேண்டும். மேற்சொன்ன அதிகாரி இல்லாதபட்சத்தில் “மாவட்ட நீதிபதி” (District Magistrate) என்னும் அந்தஸ்து பெற்ற ஒரு அரசு அதிகாரிக்கு இத்தகைய ஆணை பிறப்பிக்கலாம்.

முக்கியமாக இத்தகைய ஆணை பிறப்பிக்கும் முன் இவ்விதம் விளம்பரம் செய்வதின் மூலம் குழந்தையின் பாதுகாப்பிற்கு எவ்வித இடர்பாடும் ஏற்படாது என்பதனை ஊர்ஜீதம் செய்தல் வேண்டும்.

- மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் : குழந்தையின் புகைப்படம், அது கண்டெடுக்கப்பட்ட இடம், அணிந்திருந்த உடை, என அடையாளம் காணத்தக்க தகவல்களுடன், அதிக அளவில் மக்கள் படிக்கக் கூடிய ஒரு செய்தித்தாளில் விளம்பரப்படுத்துதல் வேண்டும். அது வேறு மாநிலத்தை சார்ந்த குழந்தை என்று ஊர்ஜீதமாக தெரிந்தால், அந்த மாநிலத்தில், அங்கு பேசப்படும் மொழியில் விளம்பரம் அளித்தல் வேண்டும். விளம்பரப்படுத்தியது முதல் 30 நாட்கள் வரை ஏதேனும் தகவல் வருகிறதா என்று உன்னிப்புடன் காத்திருத்தல் வேண்டும்.
- குழந்தையை பராமரித்து வரும் சிறப்பு தத்து நிறுவனம் அல்லது குழந்தை பராமரிப்பு இல்லம் : தங்கள் வசம் உள்ள குழந்தையை தேடி யாரேனும் வருகிறார்களா என்பதனை கண்காணித்தல் வேண்டும்.
- முப்பது நாட்கள் முடிந்த நிலையில் குழந்தையை தேடி யாரும் வராதபட்சத்தில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் அது குறித்த அறிக்கையை குழுமத்திடம் சமர்பிப்பார்.
- குழந்தையை பாதுகாத்து வரும் சிறப்பு தத்து நிறுவனம், யாரும் குழந்தையை தேடி வரவில்லை எனில் அது குறித்த தகவலை சமர்பிக்கும்.
- காவல் நிலையம் : குழந்தையின் பெற்றோரை தேட தாங்கள் எடுத்த நடவடிக்கை பலன் அளிக்கவில்லை எனில், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தை எனில் இரண்டு மாத கால கட்டத்திற்குள் குழுமத்திற்கு அறிக்கை சமர்பிக்க வேண்டும். 2 வயதிற்கு மேற்பட்ட குழந்தை எனில் நான்கு மாதத்திற்குள் சமர்பிக்க வேண்டும். இந்த குறிப்பிட்ட காலகட்டங்களுக்குள் காவல்துறை அறிக்கை சமர்பிக்கவில்லை எனில், அக்குழந்தையின் பெற்றோர் அறியப்படவில்லை என குழு பொருள் கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது.
- நன்னடத்தை அலுவலர் : கைவிடப்பட்ட குழந்தையை குறித்த சமூக விசாரணை மேற்கொண்ட பின் தன்னுடைய அறிக்கையை சமர்பிப்பார்.

குழந்தை நல குழுமம், மேற்சொன்ன அனைத்து அறிக்கைகளும் கிடைத்த பின் “கோயா பாயா” இணையதளத்தின் மூலம், எந்த தகவலும் கிடைக்கவில்லை என ஊர்ஜீதம் செய்த பின் அக் குழந்தை “ஒரு கைவிடப்பட்ட குழந்தை - சட்டரீதியாக தத்து கொடுக்க ஏதுவான குழந்தை” என்று சான்று வழங்கும். அத்தகைய சான்றிதழில் அக்குழுவின் தலைவர் உள்ளிட்ட மூன்று அங்கத்தினர் கையொப்பம் இருத்தல் வேண்டும். இத்தகைய சான்றிதழ் குழந்தையை கண்டெடுத்த மாவட்டத்தை சார்ந்த குழந்தை நல குழு அல்லது அக்குழந்தையை பராமரிக்கும், சிறப்பு தத்து நிறுவனம் அல்லது குழந்தை பராமரிப்பு இல்லம் ஆகியவை இருக்கும் மாவட்டத்தை சார்ந்த குழந்தை நல குழு வழங்கலாம்.

இரட்டை குழந்தைகள் அல்லது உடன்பிறந்த குழந்தைகளாக இருக்கும்பட்சத்தில், இரு குழந்தைகளுக்கும் சேர்த்து ஒரே சான்றிதழ் வழங்கலாம். மேலும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படியும், தத்து கொடுக்க வழக்கத்தில் உள்ள நடைமுறை விதிகளின் படியும் இது போன்ற உடன்பிறந்த குழந்தைகளை தத்து கொடுப்பதின் மூலம் பிரிக்கக் கூடாது என்பதும், அவர்களை ஒரே பெற்றோருக்கு தத்து கொடுத்தல் வேண்டும் என்பதும் எல்லோரும் கருத்தில் கொள்ள வேண்டிய விதிமுறையாகும்.

## குறிப்பு : 1

மேற்சொன்ன நடைமுறை விதிகள் அனைத்தும் "தத்து கொடுத்தல்" குறித்த கட்டுப்பாட்டு விதிகள்-2017ல் குறிப்பிடப்பட்டுள்ளது, என்ற போதும் குழந்தையை கைவிட்டு சென்ற பெற்றோர் யார் என்று காவல்துறை அல்லது இதர அமைப்புகளின் வாயிலாக அறியப்படும் போது, குழந்தை நல குழுமம் எத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. எனவே இது குறித்து உச்ச நீதிமன்றம் கூறியுள்ள விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். லஷ்மிகாந் பாண்டே (எதிர்) மத்திய அரசு, என்னும் வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் வாயிலாக சொல்லப்பட்ட நடைமுறை விதிகளில், குழந்தையை கைவிட்டு சென்ற பெற்றோர் கண்டுபிடிக்கப்பட்டால் குழந்தை நல குழுமம், அவர்களை நேரில் வரும்படி நோட்டீஸ் அனுப்ப வேண்டும். அவர்கள் வந்தவுடன், குழந்தையை கைவிட்ட காரணம் என்ன?, குழந்தை திரும்பப் பெற விருப்பம் உண்டா? என்பதனை கேட்டறிதல் வேண்டும். அவர்களுக்கு குழந்தையை திரும்பப் பெற விருப்பம் இல்லை எனில் அவர்கள் கைப்பட ஒப்படைப்பு பத்திரம் எழுதித் தரும்படி கேட்டு, பின்னர் அக்குழந்தை தத்து கொடுக்க ஏதுவான குழந்தை என்று அறிவிக்கலாம். மாறாக குழந்தையை திரும்பப் பெற விருப்பம் தெரிவித்தால், குழந்தையின் சீரிய நலனுக்கு (Best interest of the child) அதிக முக்கியத்துவம் கொடுத்தே ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

இது தவிர குழந்தையை திரும்பப் பெற விரும்பாத பெற்றோர் அல்லது குழுவின் அழைப்பிற்கு செவி சாய்க்காத பெற்றோராய் இருப்பின், ஒரு வார காலம் அவர்களின் மனமாற்றத்திற்காக அவகாசம் கொடுத்து, பின்னர் அக்குழந்தையை "சட்டரீதியாக தத்து கொடுக்க ஏதுவான குழந்தை" என அறிவித்து சான்றிதழ் வழங்கலாம். ஒரு ஒப்படைப்பு பெற்றோருக்கு அளிப்பது போல் இரண்டு மாத கால அவகாசம் அளிக்கத் தேவை இல்லை.

## குறிப்பு : 2

- இளைஞர் நீதி சட்டம் 2015-சட்டப்பிரிவு 38(1)ன் படி குழந்தையை கைவிட்டு சென்ற பெற்றோர் கண்டறியப்பட்டாலும் சட்டத்தின் கீழ் எந்த வழக்கும் பதிவு செய்தல் கூடாது.
- ஒரு குழந்தை சட்டரீதியாக தத்து கொடுக்க தகுதியான குழந்தை என அறிவிக்க, இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தையாக இருப்பின், இரண்டு மாதமும், இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தையாக இருப்பின் நான்கு மாதமும் கால அவகாசம் வழங்கப்படும்.

## ஒரு ஒப்படைக்கப்பட்ட குழந்தை (Surrendered Child)

- குழந்தையை பெற்ற பெற்றோர், தங்களது சமூக பொருளாதார சூழ்நிலை தங்கள் கட்டுபாட்டிற்குள் இல்லாத காரணத்தால், தங்கள் குழந்தையை நல்ல முறையில் வளர்க்க இயலாது என்ற முடிவுக்கு வரும் போது, தாங்களாகவே முன் வந்து தங்கள் குழந்தையை குழந்தை நல குழுவின் வசம் ஒப்படைத்து, அக்குழந்தையை உள்நாட்டிலோ அல்லது அயல்நாட்டிலோ தத்து கொடுக்க தங்களது முழு சம்மதத்தை தெரிவிக்கும் வகையில் ஒரு ஒப்படைப்பு பத்திரத்தில் கையொப்பம் இடுவர்.

  இத்தகைய செயல் யாருடைய வற்புறுத்தலோ அல்லது அச்சுறுத்தலோ இன்றி அப்பெற்றோர் குழந்தையின் சீரிய நலனைக் கருத்தில் கொண்டே எடுத்த ஒரு இறுதி முடிவாக இருத்தல் வேண்டும்.

குழந்தையை ஒப்படைக்க விரும்பும் பெற்றோர் குழந்தை நல குழுவை நேர்முகமாகவோ அல்லது சிறப்பு தத்து நிறுவனம், போன்றவற்றின் துணையுடனோ அணுகலாம்.

## அத்தகைய சூழ்நிலையில் குழு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை விதிகள்:-

- குழந்தையை ஒப்படைக்க வரும் பெற்றோரின் தனி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். ஒப்படைப்பு எல்லோரும் பார்க்கும் வகையில் இன்றி, தனி அறையில் நிகழ வேண்டும்.
- முக்கியமாக ஒரு திருமணம் ஆகாத தாய், குழந்தையை ஒப்படைக்கும் போது, ஒரு பெண் உறுப்பினர் முன்னிலையில் மாத்திரமே அது நிகழலாம்.
- எழுத்தறிவு இல்லாத பெற்றோராய் இருப்பின் இலவச சட்ட மையத்தை சார்ந்த ஒரு வழக்கறிஞர், அவர்களுக்காக ஒரு ஒப்படைப்பு பத்திரம் தயார் செய்து, அதை படித்துக் காட்டி நன்கு விளக்கி, பின்னர் அவர்கள் முழு புரிதலுடன் கையொப்பம் இட வழி வகுக்க வேண்டும்.
- ஒரு ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பம் இட்ட தேதியில் இருந்து இரண்டு மாதம் நிறைவடையும் காலகட்டத்தில், அப்பெற்றோருக்கு மனமாற்றம் ஏற்படின், திரும்ப வந்து ஒப்பந்தத்தை ரத்து செய்து, குழந்தையைக் கேட்டு பெறும் உரிமை உண்டு. இத் தகவலை பெற்றோருக்கு தெளிவாக எடுத்து சொல்லும் பொறுப்பு, குழந்தை நல குழுவிற்கு, தத்து நிறுவனத்திற்கும் உண்டு.
- ஒப்படைக்கப்பட்ட ஒரு குழந்தையின் தகவலை பத்திரிகையில் விளம்பரப்படுத்த தேவையில்லை.
- பெற்றோருக்கும் வேறு எந்த அறிவிப்பும் விடுக்கத் தேவை இல்லை. அவர்களே மனம் மாறி, குழந்தையை தேடி வராத நிலையில், அக்குழந்தை, தத்து கொடுக்க தகுதியான குழந்தை என குழந்தை நல குழுவால் அளிக்கப்படும்.

## ஒரு குழந்தை சட்டரீதியாக தத்து கொடுக்க தகுதியான குழந்தை என அறிவிக்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கால வரையறை:

### கன்டெடுக்கப்பட்ட குழந்தை

கண்டெடுத்த குழந்தையை வைத்திருக்கும் நிறுவனம் - (SAA, Police, DCPO)

24 மணி நேரத்திற்குள் குழந்தை நல குழுவின் முன்னர் ஒப்படைக்க வேண்டும்.
*விதி-6(2)*

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தையின் விபரங்களை தத்து இணையதளத்தில்

மூன்று நாட்களுக்குள் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
*விதி-6(5) மற்றும்* 7(10)

குழைந்தை நல குழுமம் DCPO-வுக்கு, பத்திரிகையில் விளம்பரம் செய்ய ஆணையிட்ட பின்,

உடன் மூன்று வேலை நாட்களுக்குள் DCPO நிறைவேற்றுதல் வேண்டும்.
*விதி-6(6)*

விளம்பரம் செய்த பின் குழந்தை நல குழுமத்திற்கு DCPO அறிக்கை சமர்பித்தல்

விளம்பரம் செய்த 30 நாட்கள் முடிந்தவுடன்.
*விதி-6(9)*

சிறப்பு தத்து நிறுவனம் தம்வசம் ஒப்படைக்கப்பட்ட குழந்தையை தேடி யாரும் வரவில்லை என அறிக்கையை

30 நாட்கள் முடிந்தவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
*விதி-6(10)*

CWC குழந்தையை "சட்டரீதியாக தத்து கொடுக்க தகுதியான குழந்தை" என அறிவித்தல்.

2 வயதுக்கு உட்பட்ட குழந்தை எனில் 2 மாத காலத்திற்குள், 2 வயதுக்கு மேற்பட்ட குழந்தை எனில் 4 மாத காலத்திற்குள்.
*விதி-6(13)*

## ஒப்படைக்கப்பட்ட குழந்தை

CWC ஒரு ஒப்படைக்கப்பட்ட குழந்தையை "சட்டரீதியாக தத்து கொடுக்க தகுதியான குழந்தை" என அறிவித்தல்.

பெற்றோருக்கு கொடுக்கப்பட்ட 60 நாள் காலவரை முடிந்தவுடன்.
*விதி-7(17)*

## இதர பணிகள்

தம்வசம் உள்ள குழந்தை தத்து கொடுக்க ஏதுவான குழந்தை என அறிவிக்கப்பட்ட பின், தத்து நிறுவனம் குழந்தையின் ஆய்வு அறிக்கை உட்பட அனைத்து ஆவணங்களையும்...

10 நாட்களுக்குள் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
*விதி-7(18)*

ஒரு குழந்தையை முதலில் இந்தியாவில் அல்லது அயல்நாட்டில் வாழும் இந்திய பிரஜைக்கு தத்து கொடுக்க, கொடுக்கப்பட்டுள்ள கால வரையறை..

5 வயதுக்குட்பட்ட குழந்தை எனில்-60 நாட்கள் - 5 வயதுக்கு மேல் அல்லது உடன்பிறப்புகள் எனில் 30 நாட்கள், மாற்று திறனாளியான குழந்தை எனில்-15 நாட்கள்.
*விதி-8*(a), (c)

# அத்தியாயம்



# 2

# தத்து எடுக்க தகுதிவாய்ந்த நபர்கள்

“அன்று நீ உன் தாயின் இதயத்திற்கு கீழ் வளர்ந்தாய். இன்று நீ என்னுடைய இதயத்திற்குள் வளர்கிறாய்”.

# தத்து எடுக்க தகுதிவாய்ந்த நபர்கள்

இயற்கை பெற்றோரின் நேர்முக சம்மதமின்றி, ஒரு குழந்தையை தத்துக் கொடுக்கும் போது அது தத்துக்கொடுக்க தகுதியான குழந்தைதான் என உறுதி செய்வது போல், அக் குழந்தையை தத்தெடுக்க விழையும் பெற்றோரும் தகுதி வாய்ந்தவர்கள்தானா என்று உறுதி செய்தலும் மிக அவசியமான ஒன்றாகும். அத்தகைய பெற்றோர் ஒரு குழந்தையை அன்புடன் பேணிகாக்கும் மனபக்குவம் கொண்டவர்களாகவும், மேலும் அதன் வளர்ச்சி, கல்வி அனைத்திற்கும் பொறுப்பேற்க கூடிய தகுதி பெற்றவர்களாக இருத்தல் மிக அவசியம். ஒரு ஒப்படைக்கப்பட்ட அல்லது கண்டெடுக்கப்பட்ட குழந்தையை தத்தெடுக்க விரும்பும் பெற்றோர், அடுத்தபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி வயது தகுதி பெற்றவராக இருத்தல் அவசியம். அத்துடன் அவர்கள் பயிற்சி பெற்ற சமூகசேவகர் / உளவியல் நிபுணர் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்படும் “குடும்ப ஆய்வு அறிக்கை” மூலமாக தத்தெடுக்க “தகுதிவாய்ந்த பெற்றோர்” என அறிவிக்கப்படுதல் வேண்டும். இனி இது குறித்து சட்டம் மற்றும் நடைமுறை விதிகள் என்ன சொல்கின்றன என்பதனை பார்ப்போம்.

ஒரு குழந்தையை தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்: உடல் அளவில் ஆரோக்கியத் தகுதியுடனும், பொருளாதார ரீதியாக வலிமை உள்ளவர்களாகவும், மனதளவில் விழிப்புணர்வுடனும் மேலும் தத்தெடுப்பிற்கு மிகவும் ஊக்கம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். சட்டப்பிரிவு 57(1)

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2015.

### தத்தெடுப்பிற்கான விதிமுறைகள்-2017 என்னும் ஆவணத்தின் விதிமுறை-5ன் படி:

- தத்தெடுக்க விரும்பும் பெற்றோர் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளாக திருமணம் புரிந்து நல்ல முறையில் வாழ்க்கை நடத்தியவர்களாக இருத்தல் வேண்டும்.
- கணவன் மனைவி இருவருக்கும், குழந்தையை தத்தெடுப்பதற்கான ஒத்த கருத்தும், முழு விருப்பமும் இருத்தல் வேண்டும்.
- திருமணமாகாத, விவாகரத்து செய்த அல்லது கணவனின் மரணத்திற்கு பின் தனித்து வாழும் ஒரு பெண், ஆண்/பெண் ஆகிய இரு பாலின குழந்தைகளை தத்தெடுக்கலாம்.
- ஆனால், மேற்சொன்ன வகையில் தனித்து வாழும் ஒரு ஆண் மற்றொரு ஆண் குழந்தையை மட்டுமே தத்தெடுக்க இயலும்.
- தத்தெடுக்கும் பெற்றோருக்கும், தத்து கொடுக்கப்படும் குழந்தைக்கும் குறைந்தபட்சம் 25 வயது வித்தியாசம் இருத்தல் அவசியம்.

- திருமணமாகி மூன்று குழந்தைகளுக்கு மேல் உள்ள பெற்றோருக்கு ஒரு குழந்தையை தத்தெடுக்க பொதுவாக அனுமதியில்லை. ஒரு வேளை, ஒரு ஊனமுற்ற அல்லது மாற்று திறனாளியாக உள்ள ஒரு குழந்தையை தத்தெடுக்க முன் வரும்பட்சத்தில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

## தத்தெடுக்க விரும்பும் பெற்றோருக்கான வயது வரம்புகள்:

| வ.எண் | குழந்தையின் வயது | கணவன், மனைவி ஆகியோரின் அதிகபட்ச கூட்டு வயது | திருமண பந்தத்தில் இல்லாத ஆண்/பெண் ஆகியோரின் அதிகபட்ச வயதுவரம்பு |
|---|---|---|---|
| 1. | 0-4 வயது வரையிலான குழந்தையை தத்தெடுக்க | 90 வயது | 45 வயது |
| 2. | 4 வயதிலிருந்து 8 வயதுள்ள குழந்தையை தத்தெடுக்க | 100 வயது | 50 வயது |
| 3. | 8-18 வரையிலான வயதில் உள்ள குழந்தையை தத்தெடுக்க | 110 வயது | 55 வயது |

### குறிப்பு :

குடும்ப உறவினர்களுக்குள், நடைபெறும் தத்தெடுப்பு அல்லது ஒரு மாற்றுத் தாய் அல்லது மாற்று தகப்பன் என்னும் உறவுமுறையில் உள்ள நபர்கள், தாங்கள் மணந்துள்ள கணவன்/மனைவி ஆகியோருக்கு, முந்தைய திருமணத்தின் வாயிலாக பிறந்த குழந்தையை தத்தெடுக்க விழையும் போது, மேற்சொன்ன வயது வரம்பு, அல்லது அவர்களுக்கு ஏற்கெனவே உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை ஆகிய எதுவும் அவர்கள் தத்தெடுக்க தடையாக இருக்காது.

## தத்தெடுப்பிற்கு தேவையான முக்கிய ஆய்வு அறிக்கைகள் மற்றும் தத்தெடுப்பிற்கான இணையதளம்:

### அ. குடும்ப ஆய்வு அறிக்கை :-

குடும்ப ஆய்வு அறிக்கை என்பது தத்தெடுக்க விரும்பும் பெற்றோரை குறித்த ஒரு ஆய்வு அறிக்கை ஆகும். இந்த அறிக்கை தத்தெடுக்க விரும்பும் பெற்றோர், அவர்களின் மனநிலை, குடும்ப சூழ்நிலை ஆகிய அனைத்தையும் அறிந்து உணர ஒரு வாய்ப்பாக அமையும். அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு தத்து நிறுவனத்தைச் சேர்ந்த பயிற்சி பெற்ற ஒரு சமூக பணியாளர், அல்லது மாநில தத்து வள நிறுவனத்தின் அங்கீகாரத்துடன் இயங்கும் சமூக பணியாளர்கள் ஆகியோர் இத்தகைய குடும்ப ஆய்வு அறிக்கையை தயாரிக்க தகுதி பெற்றவர்கள்.

இவர்கள் தத்தெடுக்க விழையும் பெற்றோரை நேரில் சந்தித்து அவர்களின் கல்வித் தகுதி, ஆண்டு வருமானம், குடும்ப சூழ்நிலை, உடல், மன ஆரோக்கியம் அனைத்தையும் கேட்டறிவர். ஒரு கூட்டு குடும்பத்தின் வருமானத்தை சார்ந்திருப்பவர்களாக இருப்பின், தத்தெடுத்தல் குறித்து குடும்ப

உறுப்பினர்களின் கருத்தையும் கேட்டறிவர். திருமணம்மானவர் எனில் கணவன் மனைவி இருவரிடமும் சுமூகமான உறவுமுறை உள்ளனவா என்பது அறிதல் அவசியம். கணவன், மனைவி இருவரிடமும் தனித்தனியாக பேசி இருவருக்கும் தத்தெடுக்கும் விருப்பம் மற்றும் அது குறித்த புரிதல் உள்ளதா என்பதனை அறிவர். அவர்களுக்கு குற்ற பின்னணி ஏதேனும் உண்டா என்பதனையும் அறிதல் வேண்டும். அவர்களுக்கு வளர்ந்த குழந்தைகள் இருப்பின், இத்தத்தெடுப்பில் அக்குழந்தைகளின் விருப்பம் என்ன என்பதனையும் கேட்டறிதல் வேண்டும். தனித்துள்ள ஆணோ, பெண்ணோ தத்தெடுக்க விழையும் சூழலில் குழந்தை வளர்ப்பில் அவர்களுக்குள்ள புரிதல், வசதிவாய்ப்பு அனைத்தையும் கேட்டறிதல் வேண்டும். இவை அனைத்தையும் கொண்டு "குடும்ப ஆய்வு அறிக்கை" தயாரித்து அவர்கள் சிறந்த தத்து பெற்றோராக விளங்குவர் என்று உணரும்பட்சத்தில் அவர்கள் "தத்தெடுக்க தகுதி வாய்ந்த" பெற்றோர் என அறிவிக்கப்படுவர். இந்த ஆய்வு அறிக்கைக்கு பின் அப்பெற்றோர் இணையதளத்தில் காத்திருப்பு பட்டியலில் சேர்க்கப்படுவர்.

**குழந்தை ஆய்வு அறிக்கை:-** அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு தத்து நிறுவனங்கள், தங்கள் பராமரிப்பின் கீழ் உள்ள ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட குழந்தைகள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் பின்னணி, அவர்களின் வயது, உடல் ஆரோக்கியம் என்று அனைத்து தகவல்களும் அடங்கிய குழந்தை ஆய்வு அறிக்கை தயாரித்தல் அவசியம்.

முக்கியமாக குழந்தையின் உடல் மனவளர்ச்சி குறித்து அது அடைந்துள்ள மைல் கற்கள், உடல் ஆரோக்கியம் அல்லது மன ஆரோக்கியம் ஆகியவற்றில் ஏதேனும் பிரச்சனை உள்ளதா போன்ற அனைத்து தகவல்களும் அளித்தல் வேண்டும். இத்தகைய அறிக்கையை தயாரிக்கும் போது அதிக பொறுப்புடன் செயல்படுதல் அவசியம். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட குழந்தையை தத்தெடுக்க ஒப்புதல் அளிப்பது என்பது ஒரு பெற்றோரின் வாழ்நாள் முடிவு. அதற்கு அவர்கள் இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களையே பெரிதும் நம்ப வேண்டிய சூழலில் உள்ளனர்.

இந்த இரண்டு ஆய்வு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே தத்தெடுக்க விரும்பும் பெற்றோர் மற்றும் தத்தெடுக்க உகந்த குழந்தை ஆகிய இருபாலருமே இணையதளத்தின் வாயிலாக தத்தெடுக்க தயார் நிலையில் உள்ளவர்களாக கருதப்படுவர்.

## ஆ. தத்தெடுப்பு இணையதளம்:-

"மத்திய தத்து வள தகவல் மற்றும் வழிகாட்டு மையம்" (Central Adoption Resource Information and Guidance Bureau)

என்னும் இந்த இணையதளம் இந்திய குழந்தைகளின் உள்நாட்டு மற்றும், அயல்நாட்டு தத்தெடுப்பிற்கு ஒரு ஆணிவேராக தற்பொழுது செயல்பட்டு வருகிறது.

2017 ஆம் ஆண்டு CARA – ஆல் தோற்றுவிக்கப்பட்ட இந்த இணையதளம் வாயிலாக, தத்தெடுக்க தகுதியான குழந்தைகள் விபரம், தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்களின் விவரம் என்று அனைத்து அம்சங்களும் பதிவு செய்யப்பட்டு, பெற்றோரும், குழந்தைகளும் ஒன்று சேரும் ஒரு பாலமாக செயல்பட்டு வருகிறது.

*www.carings.nic.in* *www.cara.nic.in*

அத்தியாயம்



3

# இந்திய குழந்தைகள் தத்தெடுப்பு – வழிமுறைகள்

# இந்திய குழந்தைகள் தத்தெடுப்பு – வழிமுறைகள்

**இனி இந்திய குழந்தைகளின் தத்தெடுப்பு எவ்விதம் நடைபெறுகிறது என்பதனை பார்ப்போம்.**

ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட ஒரு குழந்தையை தத்தெடுக்க முன்னுரிமை பெற்ற பெற்றோர்கள் யார்?

ஒரு குழந்தையை தத்து கொடுக்கும் போது கூடுமான வரை அதன் இனம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் பின்னணியிலேயே அது வளர்வதற்கான வாய்ப்பை அளித்தல் வேண்டும் என்பது ஒரு முக்கியமான விதி முறையாகும். அதை மனதில் கொண்டே, ஒரு தத்து கொடுக்க தகுதியான குழந்தையை முதலில் தத்தெடுக்க இந்திய நாட்டில் வாழும் இந்திய குடிமக்கள் அல்லது அயல்நாட்டில் வாழும் இந்திய குடிமக்கள் (NRI) ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆகையால் அத்தகையோரால் தத்தெடுக்கப்பட, ஒவ்வொரு குழந்தைக்கும் போதிய கால அவகாசம் கொடுக்கப்படுகிறது. அதேசமயத்தில் பெரும்பாலான இந்திய பெற்றோரை பொறுத்தவரை குழந்தையின்மை என்பதே தத்தெடுப்பிற்கு முக்கிய காரணமாக அமைகிறது. அத்தகைய பெரும்பாலான பெற்றோர்கள் 5 வயதிற்குட்பட்ட ஆரோக்கியமான குழந்தையை தத்தெடுக்க விரும்புகின்றனர். 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் அல்லது உடல் ரீதியாக ஏதேனும் பாதிப்புக்குள்ளான குழந்தைகள் ஆகியோருக்கு உரிய தத்து பெற்றோரை தேடுவது சற்று சிரமமான காரியமாக விளங்குகிறது. அதேபோல் உடன் பிறப்புகளாக உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள், இரட்டை குழந்தைகள் ஆகியோரை தத்து கொடுத்தல் மூலம் பிரித்தல் கூடாது. ஒரே பெற்றோர் அவர்களை தத்தெடுத்தல் வேண்டும் என்பதும் ஒரு முக்கிய விதிமுறையாகும். இவை அனைத்தையும் மனதில் கொண்டே இந்திய தத்தெடுப்பிற்காக குழந்தைகள் காத்திருக்கும் கால அவகாசம் மாறுபடுகிறது.

**அத்தகைய கால அவகாசம் பின்வருமாறு:**

1. 5 வயதுக்குட்பட்ட குழந்தையாக இருப்பின், மேற்சொன்ன இந்திய பெற்றோர்கள் தத்தெடுக்க 60 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்படும். அந்த கால கட்டத்திற்குள் எவரும் அக்குழந்தையை தத்தெடுக்க முன் வராத நிலையில், இந்திய வம்சாவளியை சார்ந்த அயல்நாட்டு பிரஜைகள், அடுத்து அயல்நாட்டு பிரஜைகள் ஆகியோருக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

2. சகோதர, சகோதரிகளாகவோ அல்லது இரட்டை குழந்தைகளாக பிறந்தவர்களாகவோ இருக்கும்பட்சத்தில், அத்தகைய குழந்தைகள் அல்லது 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் ஆகியோர் காத்திருப்பு பட்டடியலில் 30 நாட்கள் வைத்திருக்கப்பட்டு, இந்தியர் யாரும் தத்தெடுக்க வராத நிலையில், அயல்நாட்டு குடிமக்கள் தத்தெடுக்க வாய்ப்பு அளிக்கப்படும்.

3. ஒரு மாற்றுத்திறனாளியான அல்லது வேறு உடல்நல பாதிப்புக்கு உள்ளான குழந்தையெனில், 15 நாட்கள் வரை காத்திருப்பு பட்டியலில் வைத்து, பின்னர் அயல்நாட்டு பிரஜைகள் தத்தெடுக்க அனுமதிக்கப்படும்.

குழந்தைகளை தத்தெடுக்கும் இந்திய குடிமக்கள் யாராக இருந்தாலும் அவர்கள் இந்திய நாட்டு எல்லைக்குள் வசிப்பவரா அல்லது அயல்நாட்டில் வசிப்பவரா என்பதை பொறுத்து அது உள்நாட்டு தத்தெடுப்பு அல்லது அயல்நாட்டு தத்தெடுப்பு என்று பாகுபடுத்தப்படும். அத்தகைய தத்தெடுப்புகளில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை விதிகளும் சற்று மாறுப்பட்டே இருக்கும்.

## இனி ஒரு ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட குழந்தையின் உள்நாட்டு தத்தெடுப்பு எவ்விதம் நடைபெறுகிறது என்பதனை பார்ப்போம்:-

- இந்திய எல்லைக்குள் வசிக்கும் இந்திய குடிமக்களாக உள்ள நபர்கள் ஒரு குழந்தையை உள்நாட்டு தத்தெடுப்பு வாயிலாக தத்தெடுக்க விரும்பினால் முதலில் செய்ய வேண்டியது, மேற்குறிப்பிட்ட தத்தெடுப்பு இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, பதிவு செய்தல் வேண்டும். பதிவு செய்த 30 நாட்களுக்குள், அதே விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள சான்றிதழ்கள் அனைத்தையும் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
- இவ்விதம் பதிவு செய்யும் பெற்றோர் முதலில் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால், தாங்கள் பதிவு செய்வது போல், இந்தியாவில் உள்ள அனைத்து பெற்றோரும் ஒவ்வொரு நொடியும் பதிவேட்டில் பதிவு செய்த வண்ணம் இருப்பார்கள். அவற்றுள் முதலில் பதிவு செய்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும். ஆகையால் இந்த மூப்பு நிலை (Seniority) அடிப்படையில் தயாரிக்கப்படும் பட்டியலில் அவர்களின் நிலை என்ன என்பதனை தொடர்ந்து கண்காணித்தல் வேண்டும்.
- இணையதள பதிவு முழுமை பெற்றவுடன், அவர்கள் இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தத்து நிறுவனம் அல்லது அத்தகைய நிறுவனம் இல்லாதபட்சத்தில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் ஆகியோரை அணுகி குடும்ப ஆய்வு அறிக்கை தயார் செய்யும்படி கோரலாம்.
- அவ்விதம் கோரப்பட்ட நிறுவனம் நான்கு வார காலகட்டத்துக்குள் குடும்ப ஆய்வு அறிக்கை தயார் செய்து தத்தெடுப்பு இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். இவ்விதம் தயாரிக்கப்பட்ட குடும்ப ஆய்வு அறிக்கை, மூன்று வருட காலத்திற்கு செல்லுபடியாகும். அதற்கு மேற்பட்ட காலமெனில், அதனைத் திரும்பவும் புதுப்பித்தல் வேண்டும்.
- ஒரு வேளை குடும்ப ஆய்வு அறிக்கை தயாரிக்கும் சமூக பணியாளர் பார்வையில் அவர்கள் தத்தெடுக்க தகுதி வாய்ந்த பெற்றோர் இல்லை என கருதும்பட்சத்தில், பெற்றோருக்கு எதிர்மறையான அறிக்கை வெளியிடலாம்.
- இவ்விதம் பாதிக்கப்பட்ட தத்தெடுக்க விழையும் பெற்றோர், CARA-விடம் மேல் முறையீடு செய்ய அனுமதியுண்டு. CARA, ஒரு குழுமத்தை உருவாக்கி, மறு ஆய்வு செய்ய பணிக்கும். மேற்சொன்ன குடும்ப அறிக்கையில் பெற்றோருக்கு எதிர்மறையாக சொல்லப்பட்ட காரணங்களை இக்குழு ஆய்வு செய்து பின்னர், பெற்றோருக்கு சாதகமாகவோ அல்லது பாதமாகவோ, தங்களது கருத்தை CARA-விடம் சமர்ப்பிக்கும். பின்னர் இறுதி முடிவை CARA-வே எடுக்கும். இந்த முடிவை 30 நாட்களுக்குள் CARA எடுத்தல் வேண்டும்.

**இனி குடும்ப ஆய்வு அறிக்கை மூலம் தகுதி பெற்ற பெற்றோருக்காக எவ்விதம் குழந்தை தேர்வு செய்யப்படுகிறது என்பதனை பார்ப்போம்.**

பெற்றோர் முதலில் தங்கள் விண்ணப்பத்தை பதிவு செய்யும் போதே அவர்கள் தத்தெடுக்க விருப்பம் குறித்த கீழ்கண்ட விவரங்களை குறிப்பிடுவர்:-

- ஆண் அல்லது பெண் குழந்தை வேண்டும் அல்லது எந்த பாலின குழந்தையாக இருந்தாலும் பரவாயில்லை.
- குழந்தையின் வயது, உடல் தகுதி, எந்த பகுதி அல்லது எந்த மாநிலத்தை சேர்ந்த குழந்தையாக இருத்தல் வேண்டும். (ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் குறிப்பிடலாம்)
- குடும்ப ஆய்வு அறிக்கையின் போதும் அவர்கள் இந்த விவரங்களை தெரிவித்திருக்கலாம்.
- பெற்றோர் பட்டியலில், அவர்களுக்கு தத்தெடுக்க வாய்ப்பு வரும் காலகட்டத்தில், மேற்சொன்ன விவரங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு தத்தெடுப்பு இணையதளம், மூன்று குழந்தைகளின் புகைப்படங்கள் மற்றும் குழந்தைகளின் விவரங்கள் அடங்கிய, “குழந்தை ஆய்வு அறிக்கை” மருத்துவ சான்றிதழ் ஆகியவற்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கும்.
- இதற்காக பெற்றோர் அன்றாடம், அவர்களுக்கு அனுப்பப்படும் மின்னஞ்சல் பட்டியலை, விழிப்புடன் ஆய்வு செய்து வருதல் அவசியம்.
- மூன்று குழந்தைகள், குறித்த தகவல் வந்தடைந்த 48 மணி நேரத்திற்குள் அவர்கள் அந்த மூன்றில் ஒன்றை தாங்கள் தத்தெடுக்க தேர்வு செய்து, பதில் அனுப்புதல் வேண்டும். அவ்விதம் செய்யத் தவறினால் காத்திருப்போர் பட்டியலில் திரும்பவும் அடிமட்டத்திற்கு அனுப்பப்பட்டு திரும்பவும் காத்திருத்தல் வேண்டும். அது ஒரு வருட காலத்திற்கு மேற்பட்டும் இருக்கலாம்.
- பெற்றோர் ஒரு குழந்தையை தேர்வு செய்தவுடன் அக்குழந்தை வசிக்கும் நிறுவனத்திற்கு தகவல் சொல்லப்படும். அந்த நிறுவனமும் பெற்றோரின் நேர்முக சந்திப்பிற்கு நாள் குறிக்கும்.
- குறிப்பிட்ட நாளில் பெற்றோர் நேரில் வந்து குழந்தையை சந்திப்பர். மேலும் தத்தெடுப்பு குழுவின் ஆய்விற்கும் அவர்கள் உடன்படுதல் வேண்டும்.
- தத்தெடுப்பு குழு அவர்கள் அக்குழந்தைக்கு உகந்த பெற்றோராக இருப்பரா? அல்லது அக்குழந்தை அப்பெற்றோருக்கு உகந்த குழந்தைதானா? என்பதனை ஆய்வு செய்து தங்கள் கருத்தை பதிவு செய்தல் வேண்டும்.

**தத்தெடுப்பு குழு:-**

1. தத்து நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு அலுவலர்
2. அந்த நிறுவனத்தைச் சார்ந்த மருத்துவர் அல்லது அரசு மருத்துவ மனையைச் சார்ந்த மருத்துவர்
3. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகைச் சார்ந்த ஒரு அலுவலர்
4. நன்னடத்தை அலுவலர்
5. 6 வயதுக்கு மேற்பட்ட குழந்தையாக இருக்கும்பட்சத்தில், அக் குழந்தை தங்கியுள்ள குழந்தை பராமரிப்பு இல்லத்தைச் சார்ந்த அலுவலர்.

- தத்து குழு செயல்பட குறைந்தபட்சமாக உறுப்பினர் இருவர் இருத்தல் வேண்டும்.
- அதுவே குழந்தை பராமரிப்பு இல்லத்து குழந்தை எனில் மூன்று பேர் இருத்தல் வேண்டும்.
- தத்தெடுப்பு குழு செயல்பட மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகைச் சார்ந்த அலுவலரின் முன்னிலை, கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- குழந்தையை நேரில் சந்தித்த பின் தத்துக்குழுவின் சம்மதத்துடன் பெற்றோர் குழந்தை ஆய்வு அறிக்கை, மருத்துவ சான்றிதழ் ஆகியவற்றில் கையொப்பமிட்டு அக்குழந்தையை தத்தெடுக்க சம்மதம் தெரிவிப்பர். முன்னதாக அவர்கள் விரும்பிய மருத்துவர் மூலம் குழந்தையின் உடல், மன, ஆரோக்கியம் குறித்த தகவல்களை பெற அவர்களுக்கு அனுமதி உண்டு.
- ஒரு வேளை தத்து குழு, அப்பெற்றோருக்கோ அல்லது குழந்தைக்கோ இந்த தத்தெடுப்பு உகந்ததல்ல என்று கருதும் போது அதற்கான உரிய காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும். பெற்றோரின் தவறு எதுவும் இல்லை என்னும் பட்சத்தில் பெற்றோரின் காத்திருப்பு பட்டியலில் அவர்களின் நிலை மாறாது. உடனே அவர்களுக்கு வேறு குழந்தைகள் காட்டப்படும், ஆனால் பெற்றோரின் நிலைப்பாட்டின் காரணமாகவே தத்தெடுப்பு குழு எதிர்மாறான முடிவுக்கு வந்தது எனில், அல்லது பெற்றோரே குழந்தையை நேரில் பார்த்த பின்பு உரிய காரணமின்றி அக்குழந்தையை தத்தெடுக்க விருப்பமில்லை என்று கூறும் பட்சத்தில், பெற்றோர் காத்திருப்பு பட்டியலில் அடிமட்டத்திற்கு அனுப்பப்படுவார்.

மாறாக பெற்றோர் குழந்தையை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு தத்தெடுப்பு குழுவும் அவர்கள் உகந்த பெற்றோர்தான் என பதிவு செய்த பின் மேற்கொள்ள வேண்டியவற்றை கீழே காணலாம்.

குழந்தையை உடனே அழைத்து செல்ல விரும்பும் பெற்றோர், “குழந்தை வளர்ப்புரிமை” உடன் படிக்கை (Foster Care Agreement) படிவத்தில் கையொப்பமிட்டு அவர்கள் குழந்தையை எடுத்துச் செல்லலாம்.

தத்து நிறுவனம் 10 நாட்களுக்குள் அனைத்து சான்றிதழ்களுடன், நீதிமன்றத்தை அணுகி, பெற்றோர் சட்டரீதியாக தத்தெடுக்க உரிய ஆணை வழங்கும்படி விண்ணப்பித்தல் வேண்டும்.

நீதிமன்ற ஆணை கிடைத்தவுடன், தத்து பெற்றோரின் பெயருடன் கூடிய பிறப்புச் சான்றிதழ் ஒன்றை அக்குழந்தைக்கு பெற்றுத் தருதல் வேண்டும்.



## உள்நாட்டு தத்தெடுப்பிற்கான கால வரையறை:-

| விதி | செயல் | கால வரையறை |
|---|---|---|
| விதி-9(5) | தத்தெடுக்கும் பெற்றோர் இணையதளத்தில் பதிவு செய்து, அனைத்து ஆவணங்கள் சமர்ப்பித்தல். | 30 நாட்களுக்குள். |
| விதி-9(10) | தத்து நிறுவனம் குடும்ப ஆய்வு அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல். | கோரப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள். |
| விதி-10(3) | தங்களுக்கு அனுப்பப்பட்ட குழந்தை குறித்த விவரங்களை பார்த்து ஒரு குழந்தையை தேர்வு செய்ய | 48 மணி நேரத்திற்குள். |
| விதி- 10(6), 10(7) | தேர்வு செய்த குழந்தையை தத்து நிறுவனம் இடைக்கால ஒப்பந்தத்தின் பேரில், பெற்றோர் வசம் ஒப்படைத்தல். | 20 நாட்களுக்குள். |
| விதி-12(1) | குழந்தையை ஒப்படைத்த உடன் தத்து நிறுவனம் நீதிமன்றத்தை அணுகி தத்து ஆணை பிறப்பிக்க மனுதாக்கல் செய்தல் | தத்து பெற்றோர் தங்கள் சம்மதத்தை தெரிவித்த 10 நாட்களுக்குள். |
| விதி-12(6) | நீதிமன்றம், தத்தெடுப்பு மனு குறித்த விசாரணை செய்து முடிவெடுக்க எடுத்துக் கொள்ள கூடிய கால அவகாசம். | இரண்டு மாதங்கள். |
| விதி-12(8) | நீதிமன்றம் ஆணை பிறப்பித்தவுடன் தத்து நிறுவனம், ஆணையின் நகலை பெற்று தத்து பெற்றோருக்கு அனுப்புதல், இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல். | தத்து ஆணை பிறப்பித்த 10 நாட்களுக்குள். |

விதி-12 (10)

குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் பெறுதல்.

- தத்து நிறுவனம் நீதிமன்ற ஆணை கிடைத்த 3 நாட்களுக்குள் பிறப்பு சான்றிதழ் கோருதல் வேண்டும்.
- உரிய அலுவலகமும், கோரிக்கை வந்த 5 நாட்களுக்குள் பிறப்பு சான்றிதழ் வழங்குதல் வேண்டும்.

## ஒரு ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட குழந்தையின் அயல்நாட்டு தத்தெடுப்பு :-

ஒரு இந்திய குழந்தையை, அயல்நாட்டில் வசிக்கும் நபர்கள் தத்தெடுத்து, அக்குழந்தையை அயல்நாட்டிற்கு அழைத்துச் செல்வதே அயல்நாட்டு தத்தெடுப்பு எனப்படும். இத்தகைய தத்தெடுப்புகள் "ஹேக் மாநாட்டு" விதிமுறைகளை பின்பற்றியே நடைபெறும்.

### அயல்நாட்டு தத்தெடுப்பு செய்யக்கூடிய நபர்கள்:-

**அயல்நாட்டு வாழ் இந்திய பிரஜைகள்:** (Non Resident Indians) இந்திய பிரஜைகள் பலர் தங்கள் தொழில், வாழ்வாதாரம், கல்வி என்று பல காரணங்களுக்காக அயல் நாடுகளில் வசிக்கின்றனர். அவர்கள் வசிக்கும் நாடு ஹேக் மாநாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட அல்லது கையொப்பமிடாத எந்த நாடாகவும் இருக்கலாம். மேலும் உள் நாட்டில் வாழும் இந்திய பிரஜைகளுக்கு சமமான முன்னுரிமை ஒரு குழந்தையை தத்தெடுக்க அயல்நாட்டு வாழ் இந்திய பிரஜைகளுக்கும் உண்டு.

**இந்திய வம்சாவளியை சார்ந்த அயல்நாட்டு பிரஜைகள்:** (Overseas Citizen of India) இவர்கள், இந்திய அரசாங்கத்தால் இந்திய வம்சாவளியை சார்ந்த அயல்நாட்டு பிரஜை - OCI என்னும் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நபர்கள், பொதுவாக இவர்கள் இந்தியாவில் பிறந்து புலம் பெயர்ந்தவர்களாக அல்லது இவர்களது பெற்றோர் அல்லது பாட்டனார் ஆகியோர் இந்திய பிரஜையாக இந்தியாவில் வசித்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**அயல்நாட்டு பிரஜைகள்:** இவர்களுக்கு இந்தியாவுடன் எந்த தொடர்பும் இல்லை என்ற போதும், தகுதி வாய்ந்த பெற்றோர் என கருதப்படும்பட்சத்தில், அவர்களும் ஒரு இந்திய குழந்தையை தத்தெடுக்க தடை எதுவுமில்லை.

குறிப்பு :

மேல் குறிப்பிட்டுள்ள இரண்டு வகை அயல்நாட்டு பிரஜைகளும் ஐக்கிய நாடுகள் சபையின், குழந்தைகளின் அயல்நாட்டு தத்தெடுப்பு குறித்த ஹேக் மாநாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு அதன் வழிமுறைகளை பின்பற்றும் ஒரு நாட்டின் பிரஜையாக இருந்தால் மட்டுமே அவர்கள் ஒரு இந்திய குழந்தையை தத்தெடுக்க அனுமதி பெறுவர்.

## இனி அயல்நாட்டு தத்தெடுப்பிற்கான நடைமுறை விதிகள் குறித்து பார்ப்போம்:

அயல்நாட்டில் வாழும் இந்திய பிரஜைகள் (NRI) அல்லது அயல்நாட்டு பிரஜைகள் (OCI+ Foreign Nationals) நேர்முகமாக தத்தெடுப்பு இணைய தளத்தில் தங்களை பதிவு செய்துக் கொள்ள இயலாது. அவர்கள் முதலில் அணுக வேண்டியது, இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு, அவர்கள் நாட்டில் இயங்கிவரும் ஒரு அயல்நாட்டு தத்து நிறுவனத்தை, அத்தகைய நிறுவனம் அவர்கள் நாட்டில் இல்லாதபட்சத்தில், அந்நாட்டு அரசு சார்ந்த தத்தெடுப்பு அதிகார மையம் அல்லது இந்திய தூதரகம், அல்லது குறிப்பிடப்பட்ட இந்திய அரசு அலுவலகம், ஆகிய ஏதேனும் ஒன்றை அணுகலாம்.

இது போன்ற ஒரு நிறுவனத்திடம் தாங்கள் ஒரு இந்திய குழந்தையை தத்தெடுக்க விரும்புவதாக விண்ணப்பித்தல் வேண்டும். அத்தகைய நிறுவனங்களின் பட்டியலை CARA-வின் இணையதளத்தில் காணலாம்.

விண்ணப்பத்தை பெற்ற நிறுவனத்தை சார்ந்த சமூக சேவகர்கள், மிக விரிவான குடும்ப ஆய்வு அறிக்கை தயாரித்தல் வேண்டும்.

பெற்றோர் கல்வித் தகுதி, ஆண்டு வருமானம், குற்ற பின்னணி, முக்கியமாக அயல்நாட்டவர் எனில், நிறம், இனம், மொழி, கலாச்சாரம் என்ற பல பாகுபாடுகளை தாண்டி, ஒரு இந்திய குழந்தையை தத்தெடுத்து வளர்க்கும் மனப்பக்குவம் உள்ளதா?, வளர்ந்த குழந்தைகள் உள்ள குடும்பம் எனில் அக்குழந்தைகளின் மனப்பான்மை போன்ற பலவற்றையும் ஆய்வு செய்து, குடும்ப அறிக்கை தயாரித்து, அவர்கள் தத்தெடுக்க தகுதி வாய்ந்த பெற்றோர் என அறிவித்தல் வேண்டும்.

இவ்விதம் குடும்ப ஆய்வு அறிக்கை தயாரித்த நிறுவனம், இந்திய தத்தெடுப்பு இணையதளத்தில் பெற்றோரின் விண்ணப்பம், குடும்ப ஆய்வு அறிக்கை, இதர கோரப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவற்றை பதிவேற்றம் செய்தல் வேண்டும். அத்தகைய நாளில் இருந்து, பெற்றோர் காத்திருப்பு பட்டியலில் சேர்க்கப்படுவர்.

பெற்றோரின் அனைத்து ஆவணங்களும் மத்திய தத்து வள அதிகார மையத்தால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, பின்னர் அவர்களுக்கு உகந்த குழந்தைகள் உள்ள தத்து நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு இரண்டு குழந்தைகள் மட்டும் தேர்வு செய்யப்படும். அத்தகைய குழந்தைகளின் புகைப்படம், குழந்தை ஆய்வு அறிக்கை, மருத்துவ சான்றிதழ் ஆகியவை அயல்நாட்டு நிறுவனத்திற்கு அனுப்பப்படும். அயல்நாட்டு நிறுவனம், அயல்நாட்டு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தத்தெடுக்க விரும்பும் பெற்றோருக்கு அந்த இரண்டு குழந்தைகளின் புகைப்படம், மற்றும் இதர தகவல்களை அனுப்பும்.

இவ்விதம் குழந்தைகள் குறித்த தகவல்கள் கிடைத்த 96 மணி நேரத்திற்குள் தங்களுக்கு வேண்டிய ஒரு குழந்தையை தேர்வு செய்தல் வேண்டும். அவ்விதம் தேர்வு செய்யப்பட்டவுடன், அடுத்த குழந்தை குறித்த தகவல்கள், திரும்பப் பெறப்பட்டு வேறு பெற்றோருக்கு அனுப்பப்படும்.

மாறாக அவர்கள் 96 மணி நேரத்திற்குள், ஒரு குழந்தையை, தேர்வு செய்யவில்லை எனில், இரண்டு குழந்தைகளின் தகவல்கள் அனைத்தும் உடன் திரும்பப் பெறப்படும்.

பெற்றோர் தாங்கள் தேர்வு செய்த குழந்தையின், “குழந்தை ஆய்வு அறிக்கை”, மருத்துவ சான்றிதழ் அனைத்தையும் நன்கு படித்து, குழந்தையை தத்தெடுக்க தங்கள் ஒப்புதலை அளித்தல் வேண்டும். ஒரு மாத காலகட்டத்திற்குள் ஒப்புதல் பெறப்படாவிடில், குழந்தையின் தகவல்கள் திரும்பப் பெறப்பட்டு, பெற்றோர் காத்திருப்பு பட்டியலில் கடைநிலைக்கு தள்ளப்படுவர்.

இந்த காலக்கட்டத்தில், தங்கள் இசைவை அளிக்கும் முன், இந்தியா வந்து குழந்தையை நேரில் பார்க்க விரும்பும் பெற்றோருக்கு அனுமதி உண்டு. அவர்கள் தாங்கள் விரும்பும் மருத்துவர் மூலம் குழந்தையின் உடல் நிலை குறித்த தகவல்கள் அறியவும் அவர்களுக்கு அனுமதி உண்டு.

குடும்ப ஆய்வு அறிக்கை தயாரித்த நிறுவனம், பெற்றோரின் அனைத்து சான்றிதழ்களின் உண்மை நகலை “சான்றுறுதி வழங்கும் வழக்குறைஞர்” (Notary Public) என்பவரின் கையொப்பத்துடன் CARA விற்கு அனுப்புதல் வேண்டும். சான்றிதழ்கள் பிற மொழியில் இருக்கும்பட்சத்தில் அதன் மொழி பெயர்ப்பும், உரிய அத்தாட்சி கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் குழந்தையை வைத்திருக்கும் தத்து நிறுவனத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

குழந்தையை தேர்வு செய்தவுடன் அயல் நாட்டு பெற்றோர், அந்நாட்டு தத்து அதிகார மையத்திடம் இருந்து தத்தெடுப்பிற்கான ஒப்புதல் கடிதம் பெறுதல் வேண்டும்.

அத்தகைய கடிதம் கிடைத்தவுடன் நம்நாட்டு தத்து அதிகார மையமான CARA ஒரு தடையில்லா சான்றிதழ் NOC வழங்கும்.

இவ்விதம் பெறப்பட்ட அனைத்து ஆவணங்களுடன், தத்து நிறுவனம், நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்து தத்து ஆணை கோர வேண்டும்.

இந்த காலக்கட்டத்தில் தத்தெடுக்க விரும்பும் அயல்நாட்டு வாழ் பெற்றோர்கள் இந்தியா வந்து, இடைக்கால வளர்ப்பு உரிமைக்கான பத்திரத்தில் கையொப்பமிட்டு தங்களுடன் குழந்தையை அழைத்துச் செல்லலாம். ஆனால் இந்திய எல்லையைத் தாண்டி குழந்தையைக் கொண்டு செல்ல இயலாது. இந்தியாவிற்குள் அவர்கள் குழந்தையுடன் தங்கியிருக்க அனுமதி உண்டு.

தத்தெடுக்கும் அயல்நாட்டு பெற்றோர், நீதிமன்றத்திற்கு நேரில் வருகை தர இயலாதபட்சத்தில், தத்து நிறுவனத்தைச் சார்ந்த ஒரு சமூக சேவகருக்கு, தங்கள் சார்பாக வழக்காடும் அதிகாரத்தை வழங்கலாம்.

நீதிமன்றமும், உரிய காலத்திற்குள் வழக்கை விசாரித்து, தத்தெடுப்பு ஆணை வழங்கும்.

நீதிமன்ற ஆணை பெறப்பட்ட உடன் தத்தெடுப்பு அதிகார மையம் ஹேக் மாநாட்டு வழிகாட்டுதல் படி ஒரு “உறுதி சான்றிதழ் வழங்கி” நம்நாடு மற்றும் குழந்தை செல்லவிருக்கும் அயல்நாடு ஆகிய நாடுகளின் குடியேற்ற அதிகாரிகளுக்கு தத்தெடுப்பு குறித்த தகவல் தெரிவித்தல் வேண்டும்.

குழந்தை பயணப்படுவதற்கான அயல்நாட்டு பயண கடவுச்சீட்டு (Passport) 10 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும்.

இவை அனைத்தையும் பெறப்பட்ட உடன் இரண்டு மாத காலகட்டத்துக்குள் அயல்நாட்டு பெற்றோர் வந்து குழந்தையை அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

## அயல்நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட குழந்தையின் நலன் குறித்த தொடர் ஆய்வு அறிக்கை பெறுதல்:

குடும்ப ஆய்வு அறிக்கை தயாரித்து அயல்நாட்டு பெற்றோரின் தத்தெடுப்பிற்கு வழி மொழிந்த அயல்நாட்டு தத்து நிறுவனம் அல்லது இதர நிறுவனம், குழந்தை அந்நாட்டிற்கு போய் சேர்ந்தவுடன் அதன் நலனுக்கு பொறுப்பேற்றல் வேண்டும். முதல் ஒரு வருட காலத்துக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், அடுத்த வருடம் 6 மாதத்திற்கு ஒரு முறையும் அறிக்கை சமர்பித்தல் வேண்டும். அதற்காக சமூக சேவகர்கள் தத்தெடுப்பு பெற்றோர் வீட்டிற்கு சென்று, குழந்தையின் நிலை, பெற்றோர் மனநிலை, அது வளர்க்கப்படும் முறை, உடல் ஆரோக்கியம் ஆகியவற்றை ஆய்வு செய்தல் வேண்டும். இவற்றில் ஏதேனும் பிரச்சனை, அல்லது சிக்கல் இருப்பின் பெற்றோருக்கு உரிய ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

தத்தெடுத்த குடும்பத்திற்குள், ஏதேனும் குழப்பம், பிரிவு அல்லது அத்தகைய குடும்பத்துடன் குழந்தை இருப்பது, அதற்கு நன்மை பயக்காது என்னும் நிலை ஏற்படின், அந்நாட்டின் சமூக நலன், குழந்தை பாதுகாப்பு மையத்தின் உதவி அக்குழந்தைக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

அந்நாட்டில் இயங்கும் இந்தியதூதரகம், குடும்ப ஆய்வு அறிக்கை தயாரித்த நிறுவனம் ஆகியவை பொறுப்பேற்று, தேவைப்படின் அக்குழந்தையை இந்தியாவிற்கு திரும்ப அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

ஹேக் மாநாட்டு உடன் படிக்கையில் கையொப்பமிட்ட நாட்டின் பிரஜையாக உள்ள இந்திய வம்சாவளியை சேர்ந்த அயல்நாட்டு பிரஜை அல்லது இதர அயல்நாட்டு பிரஜை, இந்திய எல்லைக்குள் ஒரு வருடத்திற்கு மேல் வசித்துவரும் பட்சத்தில் அவர்கள் தத்தெடுக்க விரும்பினால் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்:

- அத்தகைய பெற்றோரின் குடும்ப ஆய்வு அறிக்கையை அங்கீகாரம் பெற்ற இந்திய சிறப்பு தத்து நிறுவனமே தயார் செய்து, அவர்களது விவரங்களை தத்தெடுப்பு இணையதளத்தில் பதிவு செய்தல் வேண்டும்.
- இணையதளத்தில் இருந்து அவர்களுக்கு அனுப்பப்படும் இரண்டு குழந்தைகளின் புகைப்படம், இதர பின்னணி அறிக்கைகளை பார்த்து 48மணி நேரத்திற்குள், ஒரு குழந்தையை தேர்வு செய்தல் வேண்டும்.
- நீதிமன்ற ஆணை வழங்கிய பின், அந்நாட்டு தூதரகத்தின் வாயிலாக, குழந்தை அவருடைய பெற்றோரது நாட்டின் குடியுரிமை பெறும்.
- தத்தெடுத்த இரண்டு வருடத்திற்குள் தத்து பெற்றோர், குழந்தையுடன் வேறு நாடுகளுக்கு செல்லும்பட்சத்தில், அவர்கள் குறித்த அனைத்து விவரங்களையும், இந்திய தத்து அதிகார மையத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்திய வண்ணம் இருத்தல் வேண்டும்.

## அயல்நாட்டில் பிறந்த குழந்தைகளை இந்திய பெற்றோர் தத்தெடுத்தல்:-

குழந்தையை தத்தெடுத்தல் என்பது நமது இந்திய பெற்றோர் இடையே மிகவும் வரவேற்பை பெற்ற ஒரு செயலாக தற்சமயம் விளங்குகிறது. ஒரு காலக்கட்டத்தில் சாதி, மதம் என்று வேறுபாடுகள் காரணமாக ஒரு கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையை தத்தெடுக்க தயக்கம் காட்டிய இந்திய பெற்றோர் இன்று இத்தடைகளை எல்லாம் உடைத்துவிட்டு அதிக அளவில் குழந்தைகளை

தத்தெடுக்க முன் வருகின்றனர். இது மிகவும் வரவேற்க தக்க ஒன்றாகும். இது மட்டுமின்றி ஒரு அயல்நாட்டில் பிறந்த ஒரு குழந்தையை தத்தெடுக்க முன்வரும் இந்திய பெற்றோரும் உள்ளனர். அத்தகைய தத்தெடுப்புகளில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை விதிகளை கீழே காணலாம்.

- குழந்தை தத்தெடுப்பு விதிமுறைகள் அனைத்தும், குழந்தை வசிக்கும் அயல்நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உடன்பட்டதாக அமையும்.
- இந்திய பெற்றோர், அயல்நாட்டு சட்டத்திற்கு உட்பட்டு, தேவைப்படும் எல்லா ஆவணங்களையும் சமர்பித்தல் வேண்டும்.
- பெற்றோரின் குடும்ப ஆய்வு அறிக்கை மற்றும் இதர ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கப்பட்டு இந்திய தத்து அதிகார மையத்திடம் இருந்து, ஹேக் மாநாட்டு விதிமுறைகள் 5 மற்றும் 17-ன் கீழ் ஒரு ஒப்புதல் கடிதம் பெற வேண்டும்.
- தத்தெடுத்த பின் குழந்தையை இந்தியாவிற்கு அழைத்து வர தேவையான நுழைவுச் சீட்டு (Visa), வழங்கப்பட்டு இந்தியா வந்த பின், அதற்கு இந்திய குடியுரிமை அளிப்பதற்கான அனைத்தும் செய்வது, இந்திய அரசின் கடமையாகும்.

நாம் இதுவரை பார்த்தவை ஒரு கைவிடப்பட்ட அல்லது, ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளின் தத்தெடுப்பு குறித்த நடைமுறை விதிகள் ஆகும். இத்தகைய தத்தெடுப்பில் குழந்தைகளின் இயற்கை பெற்றோர் எந்த வகையிலும் சம்பந்தப்பட வாய்ப்பில்லை. குழந்தைக்கு எந்த வகையான ரத்த சம்பந்தமும் இல்லாத மூன்றாவது நபர்களான, சிறப்பு தத்து நிறுவனத்தை சேர்ந்தவர்கள், அரசு, அரசு சாரா பல நிறுவனங்கள், தத்தெடுப்பு இணைய தளம் என்று பல அமைப்பின் தலையீட்டால் தத்து கொடுத்தல் நடைபெறுகிறது. இத்தகைய தத்தெடுப்புகளில் குழந்தைகளின் உரிமை பாதுகாக்கப்படுதல் அவசியம். மேற்சொன்ன அனைத்து நடைமுறை விதிகளும் அத்தகைய நோக்கத்துடனே அமுலில் உள்ளன.

"இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015"-ன் கீழ் எல்லா பெற்றோர்களும் தாங்கள் விரும்பும் மற்றொரு பெற்றோருக்கு தங்கள் குழந்தையை தத்து கொடுக்க இயலுமா என்பது ஒரு கேள்விக்குறியே? ஏனென்றால் இச்சட்டத்தின் கீழ் குழந்தையை பெற்ற தாய் தந்தையர் தங்களுடன் பிறந்த சகோதர, சகோதரிகளில் ஒருவருக்கு அல்லது தங்களது தாய், தந்தையருக்கு மட்டுமே தங்கள் குழந்தையை தத்து கொடுக்க இயலும். இது தவிர வேறு எந்த உறவினருக்கோ, தாங்கள் விரும்பும் நண்பர் குடும்பத்திற்கோ தங்கள் குழந்தையை தத்து கொடுக்க இயலாது.

> சட்டப்பிரிவு 2-(52)ன் படி ஒரு குழந்தையை அவரது பெற்றோரிடம் இருந்து தத்தெடுக்க உரிமை பெற்ற உறவினர்கள்: தந்தையுடன் பிறந்த சகோதரர் அல்லது சகோதரி, தாயுடன் பிறந்த சகோதரன் அல்லது சகோதரி தந்தையின் பெற்றோர், தாயின் பெற்றோர்.

## அயல்நாட்டு தத்தெடுப்பிற்கான கால வரையறை :-

| விதி | செயல் | கால வரையறை |
|---|---|---|
| விதி-15 (7) | அயல்நாட்டு பெற்றோர் தங்களுக்கு அனுப்பப்பட்ட இரண்டு குழந்தைகளில் ஒன்றை தேர்ந்தெடுத்தல். | 96 மணி நேரத்திற்குள் |
| விதி-15 (10) | தேர்வு செய்த குழந்தையை தத்தெடுக்க எழுத்து மூலம் சம்மதம் தெரிவித்தல். | 30 நாட்களுக்குள் |
| விதி-16(1) | CARA– தடையில்லா சான்று வழங்குதல் (NOC). | தத்து பெற்றோர் சம்மதம், இதர ஆவணங்கள் மற்றும் தத்து பெற்றோர் வசிக்கும் அயல்நாட்டு தத்து அதிகார மையத்தின் ஒப்புதல் அனைத்தும் பெறப்பட்ட தேதியில் இருந்து 10 நாட்களுக்குள் |
| விதி 12(1), 17(1) | சிறப்பு தத்து நிறுவனம் தத்தெடுப்பு ஆணைக்காக நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்தல். | தடையில்லா சான்று கிடைத்த 10 நாட்களுக்குள். |
| விதி-12(6) | நீதிமன்றம் தத்து ஆணை வழங்குதல் | 2 மாத காலத்துக்குள் |
| விதி-12(8) | தத்து நிறுவனம் நீதிமன்ற ஆணை நகலை வாங்கி, பெற்றோருக்கு அனுப்புதல், இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல். | ஆணை பிறப்பித்த 10 நாட்களுக்குள் |

| | | |
|---|---|---|
| விதி-18(1) | CARA-ஹேக் மாநாட்டு 23 வது ஷரத்துப்படி தத்து குறித்த உறுதி சான்றிதழ் (Conformity Certificate) வழங்குதல். | நீதிமன்ற ஆணை கிடைத்த 3 வேலை நாட்களுக்குள் |
| விதி-18(3) | தத்து நிறுவனம் குழந்தைக்கு கடவுச் சீட்டு (Passport) வாங்க மனுகொடுத்தல் | நீதிமன்ற ஆணை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள். |
| விதி-18(4) | கடவுச் சீட்டு அலுவலகம் (Passport Office) கடவுச்சீட்டு வழங்குதல் | மனு பெற்றுக் கொண்ட 10 நாட்களுக்குள். |
| விதி-18(5) | தத்து நிறுவனம், குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் வழங்க மனு கொடுத்தல். | நீதிமன்ற ஆணை கிடைத்த மூன்று பணி நாட்களுக்குள் |

## பெற்றோர்களே நேர்முகமாக தத்துக் கொடுத்தல்:

இதுவரை நாம் பார்த்தது ஒரு ஒப்படைக்கப்ட்ட அல்லது கைவிடப்பட்ட குழந்தையின் தத்தெடுப்பிற்கான விதிமுறைகள் மட்டுமே. ஆனால் பெற்றோருடன் வசித்து வரும் ஒரு குழந்தையை, அதன் பெற்றோரே விருப்பத்துடன் முன்வந்து மற்றோரு பெற்றோருக்கு தத்து கொடுக்க விரும்பினால், அத்தகைய தத்தெடுப்பிற்கான சாத்தியக் கூறுகள் யாவை என்பதனை இனி பார்க்கலாம்.

“இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டம்-1955” என்னும் சட்டத்தின் கீழ் இத்தகைய தத்தெடுப்புகளுக்கு முழு அனுமதி உண்டு. ஆனால் தத்தெடுப்பவர் ஒரு இந்துவாக இருத்தல் அவசியம், மற்றும் வயது வரம்பு போன்ற இதர தகுதிகள் பெற்றவராய் இருத்தல் வேண்டும். அவை குறித்து அத்தியாயம் 5ல் பார்க்கலாம்.

ஆனால் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2015ன் கீழ் ஒரு பெற்றோர் வசம் வாழும் குழந்தையாக இருக்கும்பட்சத்தில் கீழ்கண்ட சூழ்நிலையில் இருக்கும் குழந்தைகள் மட்டுமே தத்தெடுக்க தகுதியான குழந்தைகளாக கருதப்படுவர்.

1. தத்தெடுக்கும் பெற்றோர், குழந்தையின் பெற்றோரின் குடும்ப உறவினராக இருத்தல் வேண்டும். இத்தகைய உறவு முறையில் இருப்பவர் உள்நாட்டில் வசிப்பவராகவோ அல்லது அயல்நாட்டில் வசிப்பவராகவோ இருக்கலாம்.

2. ஒரு குழந்தையின் மாற்று தாய் மற்றும் தந்தை, குழந்தையின் இயற்கை பெற்றோர் இருவரின் சம்மதத்துடன் தத்து எடுக்கலாம்.

## குடும்ப உறவினர் இடையே உள்நாட்டு தத்தெடுப்பு:

தத்தெடுக்க விரும்பும் பெற்றோர், தங்கள் விண்ணப்பம் மற்றும் குழந்தையை பெற்ற பெற்றோரின் சம்மத கடிதம், தத்து பெற்றோர் தங்கள் குடும்ப வருமானம், சொத்து மதிப்பு என்று தங்கள் சம்பந்தப்பட்ட தகவல் அனைத்தும் அடங்கிய அறிவிப்பு படிவம் என்று அனைத்தையும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். பின்னர் நீதிமன்றத்திலும் விண்ணப்பித்து ஆணை பெறுதல் வேண்டும்.

## மாற்று தாய், மாற்று தந்தையின் தத்தெடுப்பு:

ஒரு குழந்தையின் மாற்று தாய், மாற்று தந்தை அக்குழந்தையை தத்தெடுக்க விரும்பினால் அதன் இயற்கை பெற்றோர் இருவரின் கையொப்பம் கொண்ட சம்மத கடிதத்துடன் அவர்களது விண்ணப்பத்தை சமர்ப்பித்து பின்னர் நீதிமன்ற ஆணை பெறலாம்.

## குடும்ப உறவினரின் அயல்நாட்டு தத்தெடுப்பு:

ஒரு அயல்நாட்டு வாழ் இந்திய பிரஜை (NRI) அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அயல்நாட்டு பிரஜை (OCI) ஆகியோர் இந்தியாவில் வாழும், சட்ட விதிமுறைக்கு உட்பட்ட உறவு முறையில் உள்ள நபரின் குழந்தையை தத்தெடுக்க விரும்பினால், அவர்கள் முதலில் செய்ய வேண்டியது, இந்திய அரசின் அனுமதி பெற்ற தாங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள அயல்நாட்டு தத்து நிறுவனத்தை அணுகி அத்தகைய நிறுவனம் இல்லாதபட்சத்தில் விதிமுறையில் சொல்லப்பட்டுள்ள இதர அமைப்புகளை அணுகி, குடும்ப ஆய்வு அறிக்கை தயாரிக்க மனு அளித்தல் வேண்டும். அத்தகைய குடும்ப ஆய்வு அறிக்கை தயாரித்த நிறுவனம், தத்து பெற்றோரின் சார்பில் இணைய தளத்தில் தத்தெடுப்பு மனுவை சமர்பித்தல் வேண்டும்.

ஒரு ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட குழந்தை தத்தெடுப்பில் குறிப்பிட்டுள்ளது போல் குழந்தை மற்றும் பெற்றோர் வயது வரம்புகள் எதுவும் குடும்ப தத்தெடுப்பில் ஈடுபடுவோர் கடைப்பிடிக்கத் தேவையில்லை.

இத்தகைய பெற்றோரின் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றவுடன் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகில், குழந்தையின் இயற்கை பெற்றோரை சந்தித்து அவர்களது குடும்ப சூழ்நிலை, அவர்கள் முழுமனதுடன் தத்து கொடுக்க சம்மதித்தனரா என்பதனை ஆய்வு செய்து “குடும்ப பின்னணி அறிக்கை” (Family Background Report) சமர்ப்பிக்கும்படி CARA ஆணை பிறப்பிக்கும்.

அத்தகைய குடும்ப பின்னணி அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் CARA அதனை அயல்நாட்டு தத்து நிறுவனத்திடம் அனுப்பி, ஹேக் மாநாட்டின் கீழ் அறிவிக்கப்பட்ட அந்நாட்டு தத்து அதிகார மையத்திடம் இருந்து உரிய சான்றிதழ் பெற வழி செய்யும்.

ஒரு வேளை ஹேக் மாநாட்டு உடன்படிக்கையில் கையொப்பம் இடாத ஒரு நாடாக இருக்கும்பட்சத்தில், அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் சான்றிதழ் வழங்கலாம்.

பின்னர் தத்து கொடுக்கும் பெற்றோர், தத்தெடுக்கும் பெற்றோர் ஆகியோர் நீதிமன்றத்தில் தேவைப்படும் அனைத்து சான்றிதழ்களுடன் விண்ணப்பித்து தத்தெடுப்பு ஆணை பெறுதல் வேண்டும்.

அத்தியாயம்



# 4

# குழந்தை தத்தெடுத்தலில் முக்கிய பங்காற்றும் நிறுவனங்கள்

# குழந்தை தத்தெடுத்தலில் முக்கிய பங்காற்றும் நிறுவனங்கள்

இந்திய தத்தெடுப்பில் முக்கியமாக கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட ஒரு குழந்தையின் தத்தெடுப்பில் முக்கிய பங்காற்றும் நிறுவனங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து இந்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

## சிறப்பு தத்து நிறுவனங்கள்:

ஒரு காலகட்டத்தில் ஆதரவற்ற குழந்தைகளை தனிநபர்கள், தொண்டு நிறுவனங்கள் என்று யார் வேண்டுமானாலும், உள்நாட்டிலோ அல்லது அயல்நாட்டிற்கோ தத்து கொடுக்கலாம் என்ற நிலை இருந்து வந்தது. இதன் காரணமாக முன்பே குறிப்பிட்டபடி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் வாயிலாக 1984-ம் ஆண்டு சொல்லப்பட்ட தீர்ப்பில் அரசு அனுமதி பெறாத ஒரு நிறுவனமோ அல்லது தனிநபரோ இத்தகைய குழந்தைகளை தத்து கொடுப்பதை முற்றிலும் தடை செய்தல் வேண்டும் என்று சொல்லப்பட்டது.

மேலும், குழந்தைகளுக்காக இயங்கும் சிறந்த தொண்டு நிறுவனங்களை இனங்கண்டு, அவர்களுக்கு சிறப்பு அங்கீகாரம் வழங்கி, தத்தெடுப்பில் ஈடுபட, மத்திய, மாநில அரசுகள் அனுமதி அளிக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. அதிலிருந்து துவங்கி இந்திய முழுவதிலும் உள்ள பல தொண்டு நிறுவனங்களுக்கு, தத்து கொடுக்கும் உரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்டு தத்து கொடுத்தல் நடைபெற்று வருகிறது.

இப்பொழுது மத்திய அரசால் கொண்டுவரப்பட்டு அமுலில் இருக்கும் “தத்தெடுப்பு விதிமுறை 2017” என்னும் ஆவணத்தின் மூலம் ஒரு சிறப்பு தத்து நிறுவனத்தின் (SAA) அமைப்பு, செயல்பாடுகள், கடமைகள் என்று அனைத்தும் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு தத்து நிறுவனம் பிறந்த சிசுவில் இருந்து 6 வயது வரையிலான குழந்தைகளை தம் வசம் வைத்து பாதுகாப்பதற்கான அனைத்து வசதிகளும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அக்குழந்தைகளை தத்து கொடுக்க ஆவன செய்வதும் அவர்களது தலையாய கடமை.

மேலும் ஒரு தத்தெடுப்பு என்று சொல்லும் போதே அத்துடன் தவிர்க்க முடியாமல் சம்பந்தப்பட்டு பாதிக்கப்பட கூடிய சூழலில் இருக்கும் மூன்று தரப்பினர்

1. குழந்தையை பெற்ற பெற்றோர்
2. குழந்தையை தத்தெடுக்கும் பெற்றோர்
3. தத்தெடுக்கப்படும் குழந்தை

*இனி சிறப்பு தத்து நிறுவனம் இவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை என்பதனைப் பார்ப்போம்:-*

## 1. குழந்தையை பெற்றெடுத்த பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமை:-

பல பெற்றோர் வறுமை, இயலாமை, சமூக கட்டுப்பாடு என்று பல காரணங்களால் தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையில் பல மனபோராட்டங்களிடையே தாங்கள் பெற்ற குழந்தையையே, தத்து கொடுக்க சம்மதம் தெரிவித்து, விட்டுச் செல்கின்றனர்.

- தத்து நிறுவனம் அத்தகைய பெற்றோரின் கௌரவம் பாதிக்காத வகையில், கண்ணியத்துடன் அவர்களை வழிநடத்த வேண்டும்.
- பெற்றோர் மற்றும் முக்கியமாக திருமணம் ஆகாமல் குழந்தையை பெற்ற பெண்ணாக இருக்கும் பட்சத்தில் அவர்களது ரகசியத்தன்மை காப்பற்றப்படுதல் வேண்டும்.
- குழந்தையை கைவிடுவதின் பின் விளைவுகள், குழந்தை நிரந்தரமாக அவர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு வேறு பெற்றோருக்கு உள்நாட்டிலோ அல்லது அயல்நாட்டிலோ தத்து கொடுக்கப்படும் என்ற விவரத்தை கூறி, அவர்கள் முழு புரிதலுடன் கையொப்பம் இடுகின்றனர் என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
- குழந்தை பிறந்ததில் இருந்து அக்குழந்தையின் உடல் நலம், உடல் மற்றும் மன வளர்ச்சி ரீதியாக கண்டறியப்பட்ட பிரச்சனைகள், பெற்றோரின் உடல் நலம் குறித்த சிறப்பு தகவல்கள் ஆகிய அனைத்தையும் கேட்டு பதிவு செய்தல் வேண்டும். இத்தகைய தகவல்கள், பின்னர் குழந்தைக்கு உடல் பாதிப்பு ஏதும் ஏற்பட்டால், மருத்துவ ரீதியாக சிகிச்சை அளிக்க பயனுள்ளவையாக அமையும்.
- பெற்றோர் யாருடைய வற்புறுத்தலுக்காகவோ, அல்லது இதர உதவிக்காகவோ தங்கள் குழந்தையை ஒப்படைக்கவில்லை என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
- இவ்விதம் ஒப்படைக்கப்பட்ட குழந்தை 18 வயது அடைந்த பின்னர், தன்னுடைய இயற்கை பெற்றோரை தேடி வரும் சூழ்நிலை ஏற்படலாம் என்பதனை தெரிவித்து, அத்தகைய சூழ்நிலையில் தத்து நிறுவனம் பெற்றோரின் முகவரி, இதர தகவல்களை அக்குழந்தைக்கு அளிக்க அனுமதி உண்டா? என்ற தகவல்களையும் கேட்டறிந்து பதிவு செய்தல் வேண்டும்.
- குழந்தையை விட்டுச்சென்ற 60 நாட்களுக்குள், அவர்களுக்கு மனமாற்றம் ஏற்படின் திரும்ப வந்து குழந்தையை பெற்றுக் கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு என்ற தகவலையும் தெரியப்படுத்த வேண்டும்.

## 2. தத்தெடுக்கும் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள்:

*தத்தெடுப்பவர்களை பார்க்கும் போது, பெரும்பாலான பெற்றோர் குழந்தை இன்மையால், தத்தெடுக்க முன் வருபவர்களாக இருப்பார்கள், அவர்கள் ஒரு வகையில் மன வருத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம்.*

- அத்தகைய பெற்றோர்களை ஒரு தத்து நிறுவனம், மிகவும் மனிதாபிமானத்துடனும், கௌரவத்துடனும் நடத்தி அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்குதல் வேண்டும்.
- அவர்கள் தத்தெடுப்பதற்கான மனுவை இணையதளத்தில் பதிவு செய்ய உதவிகரமாக இருத்தல் வேண்டும்.

- தொழில் முறை பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் மற்றும் சமூக பணியாளர்கள் மூலம் ஒரு குழந்தை தத்தெடுப்பு குறித்த அனைத்து விஷயங்களையும் தெரியப்படுத்துதல் வேண்டும். மேலும் அவர்கள் விரும்பும் குழந்தை, ஆணா அல்லது பெண்ணா, அவர்கள் வயிற்றில் பிறக்காத ஒரு குழந்தைக்கு பெற்றோராய் இருக்கக் கூடிய மன முதிர்ச்சி உள்ளதா? தத்தெடுக்கப் போகும் குழந்தையின் சமூகம் மற்றும் மரபணு பின்னணி ஆகியவற்றை பற்றிய அவர்களது மனநிலை, குழந்தை வளர்ப்பு மற்றும் குழந்தையை கண்டித்தல் போன்றவற்றில் அவர்களது நிலைப்பாடு என்று பலவற்றை பற்றி அவர்களுடன் பேசுவதின் மூலம் பெற்றோர் மனதளவில் தத்தெடுக்க தயாராக உள்ளனரா என்பதனை அறிதல் வேண்டும்.

- முக்கியமாக குழந்தைக்கு, தான் ஒரு தத்தெடுக்கப்பட்ட குழந்தை என்பதனை எப்பொழுது, எவ்விதம் தெரிவிக்கலாம் என்பதனை குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

- மேலும் ஒரு தத்தெடுத்த குழந்தை வளர்ந்த பின், தன்னுடைய இயற்கை பெற்றோர் குறித்து அறிய அல்லது அவர்களை தேடிச் செல்ல விரும்பினால், அதனை எவ்விதம் கையாள்வது என்பது பற்றியும் பேசுதல் வேண்டும்.

- தத்தெடுக்க விரும்பும் பெற்றோருக்கு “குடும்ப ஆய்வு அறிக்கை” தயாரிக்கும் வாய்ப்பு ஏற்படின் அதை முனைப்புடன் ஒரு மாத காலத்திற்குள் செய்து முடித்தல் வேண்டும். மேலும் அவர்களுக்கு குழந்தை கிடைத்து, தத்தெடுப்பு முழுமை பெறும் வரையிலான காலகட்டத்தில், அவர்களது வேலை, ஊதியம், இருப்பிடம் என்று மாறுபடும் போது, அவ்வப்போது குடும்ப ஆய்வு அறிக்கையை புதுப்பித்த வண்ணம் இருத்தல் வேண்டும்.

- குழந்தைகளின் வளர்ச்சியில் முக்கியமான தருணங்களில் வீடியோ, படக்காட்சி எடுத்து வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய படக்காட்சிகள், பின்னர் தத்தெடுக்கும் பெற்றோருக்கு மிகப் பெரிய பொக்கிஷமாக அமையலாம்.

- குழந்தையை தேர்வு செய்த பின் வளர்ப்பு உரிமைக்கான ஒப்பந்தத்தில் கையொப்பம் பெற்று, குழந்தையை ஒப்படைத்தல், பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து, தத்தெடுப்பு ஆணை பெறுதல், தத்து கொடுத்த பின் அவ்வப்போது நேரில் சென்று குழந்தையையும், பெற்றோரையும் சந்தித்து தொடர்கண்காணிப்பு அறிக்கை தயாரித்தல் என்று பல பணிகளும், பொறுப்புகளும் சிறப்பு தத்து நிறுவனங்களுக்கு உண்டு.

## 3. தத்தெடுக்கும் குழந்தைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள்:

*ஆதரவற்ற அல்லது ஒப்படைக்கப்பட்ட 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை பேணிக்காக்கும் முழு பொறுப்பு சிறப்பு தத்து நிறுவனத்துக்கு உண்டு.*

- அவர்களது உடல், மன, சமூகவளர்ச்சி, கல்வி, விளையாட்டு, அவர்களின் பாதுகாப்பு என்று ஒரு முழுமையான குழந்தை வளர்ப்பிற்கான அனைத்து விஷயங்களிலும் அவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- அவ்வப்போது அவர்கள் வசம் உள்ள குழந்தைகளின் பட்டியல், பெற்றோர் வசம் திரும்பிச் சென்ற குழந்தைகள், வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட விவரம், தத்தெடுக்கப்பட்டு சென்ற

குழந்தைகள், குழந்தை மரணம், என்று எல்லா விவரங்களையும் குழந்தை நல குழு, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவகம், தத்தெடுப்பு இணைய தளம், "கோயா பாயா" இணைய தளம் ஆகிய அனைத்திலும் பதிவு செய்தல் வேண்டும்.

- ஒரு குழந்தை, குழந்தை நல குழுமத்தின் வாயிலாக, தத்தெடுக்க ஏதுவான குழந்தை என அறிவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் அந்த சான்றிதழ், புகைப்படம், குழந்தை ஆய்வு அறிக்கை மருத்துவ சான்றிதழ் அனைத்தையும் தத்து இணைய தளத்தில் பதிவு செய்து, அக்குழந்தையின் துரிதமான தத்தெடுப்பிற்கு வழி வகுக்க வேண்டும்.
- தத்தெடுக்கப்படும் குழந்தைக்கு குடும்ப சூழ்நிலை என்றால் என்ன? அது வாழப்போகும் குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஆகியவை பற்றி அக்குழந்தையின் வயதுக்கேற்ற முறையில் பயிற்சியும், ஆலோசனையும் வழங்கி தத்தெடுப்பு வெற்றி பெற வழி செய்தல் வேண்டும்.
- இரட்டை குழந்தைகள், சகோதர, சகோதரிகள் ஆகியோரை தனித்தனியே பிரிக்காமல் அவர்களை ஒரே பெற்றோருக்கு தத்து கொடுத்தல் வேண்டும்.
- இதர குழந்தை இல்லங்களில் வசிக்கும் 6 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளின் தத்தெடுப்பிற்கு தேவைப்படின் அவ்வப்போது பொறுப்பேற்கும் கடமையும் அவர்களுக்கு உண்டு.
- தத்தெடுக்கப்பட்ட ஒரு குழந்தை 18 வயது தாண்டிய பின் தன்னுடைய இயற்கை பெற்றோரை சந்திக்க விரும்பினால், கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு, ஒரு சிறப்பு தத்து நிறுவனம் இயன்ற உதவிகளை வழங்குதல் வேண்டும்.

## ஆலோசனை வழங்குதல்:-

தத்தெடுப்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பொருத்தவரை, இது ஒரு சட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் சம்ந்தப்பட்ட விஷயம், ஆனால் அதில் ஈடுபடும் முக்கிய மூன்று பங்குதாரர்கள் ஆகிய குழந்தையின் இயற்கை பெற்றோர், தத்தெடுக்கும் பெற்றோர் மற்றும் தத்தெடுக்கப்படும் குழந்தை ஆகிய மூவரை பொறுத்தவரை இது மிகவும் மனம் மற்றும் சமூக அளவில் பாதிக்கப்படக் கூடிய ஒரு விஷயம். அவர்களுக்கு உளவியல் படித்த நிபுணர்களின் ஆலோசனை மிகவும் தேவையான ஒன்று இதற்கான வாய்ப்பை உண்டாக்கித் தருவது ஒரு சிறப்பு தத்து நிறுவனத்தின் பணியாகும்.

அ. தாங்கள் பெற்ற குழந்தையையே தத்து கொடுத்தலுக்கு ஒப்படைத்து செல்லும் இயற்கை பெற்றோர் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாக வாய்ப்பு உண்டு. அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

ஆ. தத்தெடுக்கும் பெற்றோருக்கும் அவர்கள் மனதளவில் சிறந்த தத்து பெற்றோர் ஆவதற்கான உதவிகள் செய்தல் வேண்டும்.

இ. தத்தெடுக்கப்படும் குழந்தைக்கும் அதன் வயதுக்கேற்ற வகையில் அவர்களை தயார் செய்தல் வேண்டும். மேலும் அவர்களுக்கு தாங்கள் தத்தெடுக்கப்பட்ட குழந்தை என்று தெரிய வரும் காலக்கட்டத்தில், அவர்கள் வளர்இளம் பருவத்தை அடையும் காலத்தில், பெரியவர்களாக வளர்ந்த பின், தன்னுடைய இயற்கை பெற்றோரை தேடி செல்ல எண்ணும் காலத்தில், அவர்களுக்கு சிறப்பு பயிற்சி பெற்ற உளவில் ஆலோசகர்களின் சேவை ஒரு தொடர் நடவடிக்கையாக தேவைப்படலாம். இவை அனைத்தையும் நன்கு உணர்ந்த சிறப்பு தத்து நிறுவனம் அதற்கான ஆலோசகர்களைப் பட்டியலிட்டு தங்கள் கைவசம் வைத்திருத்தல் அவசியம்.

## அங்கீகாரம் பெற்ற அயல்நாட்டு தத்து நிறுவனத்தின் பணிகள்:

“அயல்நாட்டு தத்தெடுப்பு” என்பது இரு நாடுகளின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட ஒரு செயலாக இருத்தல் வேண்டும். ஒரு அயல்நாட்டு வாழ் இந்திய பிரஜை, இந்திய வம்சாவளியை சேர்ந்த அயல்நாட்டு பிரஜை, இதர பிரஜைகள் ஆகியோர் தத்தெடுக்க விரும்பும் போது, அவர்கள் நேர்முகமாக விண்ணப்பிக்கவோ, அல்லது நேரில் வந்து குழந்தையை தேர்வு செய்யவோ இயலாது. எனவே அங்கீகரிக்கப்பட்ட அயல்நாட்டு தத்து நிறுவனங்கள் அத்தகைய பெற்றோரின் பிரதிநிதியாக இருந்து அவர்கள் சார்பாக செயலாற்ற கடமை பெற்ற நிறுவனங்கள் ஆகும்.

### அத்தகைய நிறுவனங்களின் செயல்பாட்டை கீழே காணலாம்.

- தத்தெடுக்க விரும்பும் அயல்நாட்டு வாழ் பெற்றோருக்கு விரிவான “குடும்ப ஆய்வு அறிக்கை” தயாரித்தல் வேண்டும்.
- பின்னர் அவர்களது விண்ணப்பம், அத்துடன் கூடிய ஆவணங்கள் அனைத்தையும் இந்திய தத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அப்பெற்றோரை காத்திருப்போர் பட்டியலில் சேர்த்தல் வேண்டும்.
- அவர்கள் ஒரு குழந்தையை தேர்வு செய்து CARA-விடம் தடையில்லா சான்று பெற்ற பின், அக்குழந்தை வசிக்கும் சிறப்பு தத்து நிறுவனத்திற்கு எல்லா ஆவணங்களையும் அனுப்பி, அவர்கள் மூலம் நீதிமன்ற ஆணை பெறுதல் வேண்டும்.
- குழந்தையை அழைத்து வர செல்லும் பெற்றோருக்கு, இந்தியாவில் பயணம் செய்தல், கலாச்சாரம், குழந்தை வளர்ந்து வரும் பின்னணி, அதன் உணவு பழக்கங்கள், பேசும் மொழி, என்று அனைத்தையும் விளக்கி சிறப்பு தத்து நிறுவனத்திடம் இருந்து குழந்தையை பெற்றுக் கொள்ள உதவிகரமாக இருத்தல் வேண்டும்.
- குழந்தை அயல்நாடு வந்து சேர்ந்ததும், அது தத்து குடும்பத்துடன் வளர்வதை தொடர் கண்காணிப்பு செய்து அறிக்கை சமர்பித்தல் வேண்டும்.
- அயல்நாட்டில், இந்திய குழந்தையை தத்தெடுத்த அயல்நாட்டு வாழ் பெற்றோரையும், அக்குழந்தைகளையும் அவ்வப்போது ஒன்று கூட்டி நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் பெற்றோர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும், அயல்நாட்டில் வசிக்கும் இந்திய தத்து குழந்தைகள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள வாய்ப்பு அளிக்கவும் செய்தல் வேண்டும்.
- தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் 18 வயது தாண்டிய பின், அவர்களது இயற்கை பெற்றோர் குடும்பத்தை தேட விழையும் போது அதற்கான உதவிகள் செய்தல் வேண்டும்.

## மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (DCPU):

(அ) மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆதரவற்ற குழந்தைகளை இனம்கண்டு, அவர்களின் தத்தெடுப்பிற்கு ஆவன செய்தல் இவர்களின் முக்கிய கடமை.

(ஆ) முன்பே குறிப்பிட்ட படி கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளில், 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சிறப்பு தத்து நிறுவனத்திடமும், 6 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குழந்தைகள் இல்லங்களிலும் ஒப்படைக்கப்படுகிறது. ஒரு சிறப்பு தத்து நிறுவனத்தில் குழந்தைகள் பெரும்பாலும் தத்து கொடுக்க ஏதுவான குழந்தைகளாக

இருப்பர். அந்த நிறுவனத்தை சேர்ந்தவர்களும், ஒரு குழந்தையை தத்து கொடுப்பதற்கான செயல்பாடுகளில் மிக்க அனுபவமும், பயிற்சியும் பெற்றவர்களாக இருப்பர். ஆனால் குழந்தை இல்லங்களில் வளரும் மொத்த குழந்தைகளில் மிக சொற்பமான குழந்தைகள் மட்டுமே தத்து கொடுக்க ஏதுவான குழந்தைகளாக இருப்பர். அந்த நிறுவனத்தை சார்ந்த நபர்களும் தத்தெடுப்பிற்காக கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளில் பயிற்சி பெற்றவர்களாக இருப்பர் என்று எதிர்பார்க்க இயலாது. இத்தகைய சூழ்நிலையில், அந்த நிறுவனத்தில் உள்ள தத்தெடுக்க ஏதுவான குழந்தைகளின் தத்தெடுப்பிற்கு மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு பொறுப்பேற்க வேண்டும்.

(இ) 6 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள், குழந்தை இல்லங்களிலேயே தொடர்ந்து இருக்கும் போது, அவர்கள் தத்தெடுப்பிற்கான செயல்பாடுகள் அனைத்தையும் செய்யும் பொறுப்பை அந்த மாவட்டத்தில் அல்லது அடுத்த மாவட்டத்தில் இயங்கும் சிறப்பு தத்து நிறுவனத்திற்கு வழங்கி, இரண்டு நிறுவனங்களும் இணைந்து செயல்பட வழி வகுத்தல் வேண்டும். அதுவும் இயலாதபட்சத்தில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகே அத்தகைய குழந்தைகளின் தத்தெடுப்பிற்கு பொறுப்பேற்க வேண்டும்.

(ஈ) கணினி பயன்பாட்டில் பரிச்சயம் இல்லாத தத்தெடுப்பு பெற்றோராய் இருப்பின், அத்தகைய பெற்றோரின் விண்ணப்பத்தை பதிவேற்றம் செய்து அவர்களை காத்திருப்பு பட்டியலில் சேர்த்தல், அப்பட்டியலில் அவர்களது முன்னேற்றம் குறித்து கண்காணித்தல் என்று பல வகையிலும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள் தத்தெடுக்க விரும்பும் பெற்றோருக்கு உதவிகரமாக இருத்தல் வேண்டும்.

(உ) மாவட்ட தத்து வள நிறுவனத்தின் உதவியுடன் நன்கு பயிற்சி பெற்ற சமூக சேவகர்கள் கொண்ட ஒரு அமைப்பை ஏற்படுத்தி, தத்தெடுப்பு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனை வழங்குதல், குழந்தை பாதுகாப்பு நிறுவனங்கள் வசம் இருக்கும் குழந்தைகளின் தத்தெடுப்பிற்கு வேண்டிய குடும்ப ஆய்வு அறிக்கை, குழந்தை ஆய்வு அறிக்கை போன்றவற்றை தயாரித்து பதிவேற்றம் செய்தல், தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு அவர்களின் வயதுக்கு உகந்த ஆலோசனை வழங்குதல் என்று பல பணிகளுக்கு அந்த அமைப்பை பயன்படுத்தலாம்.

(ஊ) சிறப்பு தத்து நிறுவனத்தின் செயல்பாட்டை கண்காணித்தல், குழந்தை நல குழுமத்திற்கு உதவிகரமாக இருத்தல் ஆகியவையும் இவர்களது முக்கிய கடமையே. கைவிடப்பட்ட ஒரு குழந்தையின் பெற்றோரை தேடி கண்டுபிடித்தல், அதற்காக செய்தித்தாளில் குழந்தை குறித்த செய்தியை விளம்பரப்படுத்துதல் ஆகியவை இவர்களது முக்கிய செயல்பாடுகளாகும்.

## மாநில அளவிலான தத்து வள மையம் (State Adoption Resource Agency-SARA) :

குழந்தை தத்தெடுப்பில் மாநில அரசின் பிரதிநிதியாகவும் மற்றும் மத்திய தத்து வள அதிகார மையத்துடன் இணைந்து செயல்படும் மாநில அளவிலான அமைப்பாகவும் “மாநில தத்து வள நிறுவனம்” இயங்குகிறது.

### இதன் முக்கிய செயல்பாடுகள்:

- மாவட்டந்தோறும் சிறப்பு தத்து நிறுவனங்களை இனங்கண்டு அவற்றிற்கு உரிமம் வழங்க மாநில அரசுக்கு பரிந்துரை செய்தல். ஏற்கனவே இயங்கி வரும் சிறப்பு தத்து நிறுவனங்களின் உரிமத்தை புதுப்பிக்க பரிந்துரை செய்தல் ஆகியவை இவர்களின் கடமைகளாகும்.

- குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறையாவது, சிறப்பு தத்து நிறுவனங்களின் முகவரி மற்றும் இதர தகவல்களுடனான பட்டியலை வெளியிடுதல் வேண்டும்.

- நான்கு மாதத்திற்கு ஒரு முறையாவது சிறப்பு தத்து நிறுவனங்களை கூட்டி, அவர்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சனைகள் குறித்து விவாதிப்பது, உரிய தீர்வு காண்பது அவசியமான கடமையாகும்.

- மாநில அளவிலான தத்தெடுப்பு செயல்பாடுகளை கண்காணித்தல்,

- இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ் இயங்கும் "குழந்தை பாதுகாப்பு" இல்லங்களில் வாழும் தத்தெடுக்க தகுதி வாய்ந்த குழந்தைகளின் தத்தெடுப்பிற்காக, அத்தகைய இல்லங்களும், சிறப்பு தத்து நிறுவனங்களும் இணைந்து செயல்பட வழி வகுத்தல்,

- HIV, AIDS-ஆல் பாதிக்கப்பட்டுள்ள அல்லது மாற்று திறனாளிகள், உடல் மற்றும் மனரீதியான பாதிப்புக்கு உள்ளான குழந்தைகள் ஆகியவற்றை பராமரிக்கும் திறன் கொண்ட இல்லங்களை இனங்கண்டு, இதைபோன்ற குழந்தைகள் அத்தகைய இல்லங்கள் மூலம் பராமரிக்கப்பட வழி வகுத்தல்,

- மாநிலத்தில் குழந்தை தத்தெடுப்புகள் திறம்பட நடைபெற வேண்டி, அதில் ஈடுபடும் நபர்களுக்கு உரிய பயிற்சிகள் நடத்துதல், பொது மக்களுக்கு தத்தெடுப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், தத்தெடுப்பு குறித்த ஆய்வு நடத்துதல், என்று பல பணிகளும், பொறுப்புகளும், "மாநில தத்து வள" நிறுவனத்துக்கு உண்டு.

- மாநில தத்தெடுப்புகள் குறித்த புள்ளி விவரங்களை சேகரித்து இணையதளத்தில் வெளியிடுதல், சட்ட விதிகளை பின்பற்றாமல் நடைபெறும் தத்தெடுப்புகளை தடுக்க வழி செய்தல், முன்பே குறிப்பிட்ட படி நன்கு பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் கொண்ட பட்டியலை வெளியிட்டு தத்தெடுக்கப்படும் குழந்தை, அதன் இரு வகையான பெற்றோர் ஆகிய அனைவரின் பயன்பாட்டிற்காக, அவர்களுக்கு உரிய ஆலோசனை கிடைக்க வழி செய்தல் என்று பலவகையான கடமைகளும் இந்த அமைப்பிற்கு உண்டு.

## மத்திய தத்து வள அதிகார மையம்: (Central Adoption Resource Authority)

மத்திய அரசின் ஒரு அங்கமாக விளங்கும் "மத்திய தத்து வள அதிகார மையம்" நாடெங்கிலும் நடைபெறும் குழந்தை தத்தெடுப்பை முறைப்படுத்துதல், கண்காணித்தல், அயல்நாட்டு தத்தெடுப்பில் முக்கிய பொறுப்பேற்றல், என்று பல முக்கிய பணிகளாற்ற கடமைப்பட்ட மையமாகும்.

முதலில் 1984-ம் ஆண்டு சொல்லப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பின் வாயிலாக இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. பின்னர் தத்தெடுப்பின் காரணமாக ஒரு நாடுவிட்டு மற்றொரு நாட்டிற்கு புலம் பெயரும், குழந்தைகளின் அயல்நாட்டு தத்தெடுப்புகளை முறைப்படுத்த வேண்டும் என்று ஐ.நா. சபையால் கூட்டப்பட்ட "ஹேக் மாநாட்டு உடன்படிக்கையில்" முக்கியமாக சொல்லப்பட்ட ஒரு வழிமுறை-அயல்நாட்டு தத்தெடுப்பில் பங்கு பெற விழையும் நாடுகள் அனைத்தும், அத்தகைய தத்தெடுப்புகளை ஒருங்கிணைக்க, மற்றும் முறைப்படுத்தும் கடமை படைத்த ஒரு தத்து அதிகார மையத்தை உருவாக்குதல் வேண்டும் என்பதாகும்.

நம்முடைய மத்திய அரசு 2004 ஆண்டு "ஹேக் மாநாட்டில்" கையொப்பமிட்டு, CARA-வை மத்திய அரசு தத்து அதிகார மையமாக அறிவித்துள்ளது.

- நாடெங்கும் நடைபெறும் இந்திய குழந்தைகளின் தத்தெடுப்பை முறைபடுத்துதல் மற்றும் கண்காணித்தல் இந்த அதிகார மையத்தின் கடமை.

- கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் பின்பற்றப்பட்டு அனுப்பப்படும். அயல்நாட்டு தத்தெடுப்புகளுக்கான மனுக்களை அங்கீகரித்து பின்னர் அத்தகைய தத்தெடுப்பிற்கான "தடையில்லா சான்றிதழ்" வழங்குதல் இந்த மையத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கிய கடமையாகும்.

- அயல்நாட்டு தத்தெடுப்பிற்கான நீதிமன்ற ஆணை கிடைத்தவுடன் ஹேக் மாநாட்டு ஒப்பந்தத்தின் விதிமுறை 23-ன் படி "உறுதி சான்றிதழ்" (Conformity Certificate) வழங்கி நம்நாடு மற்றும் அயல்நாட்டு "குடிவரவு அதிகாரிகளுக்கு" (Immigration Authorities) இந்த தத்தெடுப்பு குறித்த தகவல் அறிவித்தல் இவர்களது கடமையாகும்.

- மேலும் நாடெங்கிலும் இயங்கி வரும் "மாநில தத்துவள நிறுவனங்கள்" (SARA), மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (DCPU), சிறப்பு தத்து நிறுவனங்கள் (SAA), மற்றும் தத்தெடுப்பில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் உரிய பயிற்சிகள், கலந்துரையாடல், பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், கருத்துப்பட்டரைகள் என்று பல வகையான முயற்சிகள் மூலம் நாடெங்கும், குழந்தை தத்தெடுப்புகள் திறம்பட நடைபெற வழிவகுத்தல் இந்த அதிகார மையத்தின் முக்கிய கடமையாகும்.

- நாட்டில் இயங்கி வரும் குழந்தை இல்லங்களின் செயல்பாட்டு தரத்தை உயர்த்துவது, அத்தகைய நிறுவனங்களை மேற்பார்வை இடுதல், இல்லங்கள் வைத்திருக்க வேண்டிய, பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல். தத்தெடுப்பில் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த நெறிமுறை நடவடிக்கைகளை போற்றி பாதுகாத்தல் போன்ற பல பொறுப்புகள் இந்த மையத்திற்கு உண்டு.

- மற்றும் குழந்தைகள் தத்தெடுப்பிற்காக, அயல்நாடுகளுடன் உடன்படிக்கை ஏற்படுத்துவது, அயல்நாட்டு தத்து நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல், தத்தெடுப்பிற்கான உரிய ஆலோசனை வழங்க ஆலோசகர் பட்டியலை தயாரித்து வெளியிடுதல். தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதுடன் அவற்றின் இரகசியத்தன்மை காப்பற்றப்படவும், வழி செய்தல் என்று பல பணிகளை செய்வது தத்து வள அதிகார மையத்தின் கடமைகளாகும்.

அத்தியாயம்

# 5



# தத்தெடுப்பிற்கு உகந்த சட்டங்கள்

“தத்தெடுப்பது என்பது உன் இதயத்தில் இருந்து வந்த முடிவு. ஆனால் தத்தெடுக்கும் முறை என்பது ஒரு சட்டத்தில் இருந்து வருகிறது. உன் இதயம் சொல்வதை கேள். அதே சமயம் சட்டம் சொல்லும் பாதையில் செல். (Irima Orear)

# தத்தெடுப்பிற்கு உகந்த சட்டங்கள்

## இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம்-1956 :

இச்சட்டம் இந்துவாகிய எல்லோருக்கும் பொருந்தும், இச்சடத்தில் “இந்து” என்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தின் படி பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், புத்த மதம், ஜைன மதம், சீக்கிய மதம் ஆகிய அனைத்து மதத்தை சார்ந்தவர்களும் இந்து என கருதப்படுவர். மேலும் இந்நாட்டில் வசிக்கம் ஒருவர், முஸ்லீமாகவோ, கிருத்துவராகவோ, பார்சீயராகவோ அல்லது யூதராகவோ இல்லாதபட்சத்தில் அவர் இந்துவாகப் கருதப்படலாம் என்ற விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெற்றோர் யார் என்றே அறியப்படாத நிலையில் உள்ள ஆதரவற்ற குழந்தைக்கும், பெற்றோரால் ஒப்படைக்கப்பட்ட ஒரு குழந்தைக்கும் எந்தவித மத அடையாளமும் இல்லை. ஆகையால் மேற்சொன்ன விளக்கத்தின்படி, இத்தகைய குழந்தைகளை “இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின்” கீழ் பல பெற்றோர் பல வருடங்களாக தத்தெடுத்து வந்துள்ளனர். மேலும் பழைய இந்து சட்டமுறைகளில் இருந்த சில இயலாமைகள் நீக்கப்பட்டு சாதி, இனம், பால் போன்ற அடிப்படைகளில் காணப்பட்ட பாரபட்சங்கள் நீக்கப்பட்டு, தத்து நிறுவனங்களின் பராமரிப்பில் உள்ள பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் இச்சட்டத்தின் மூலம் பயனடைய வழி செய்துள்ளது.

சட்டப்பிரிவு 6-ன் படி, சட்டப்படி தத்தெடுப்பு நடைபெற, தத்தெடுப்பவர், எடுக்கப்படுவர், கொடுப்பவர் ஆகிய அனைவரும், இச்சட்டத்தின் கீழ் தகுதி பெற்ற நபர்களாக இருத்தல் அவசியம்.

## தத்து எடுப்பவரின் தகுதி:

ஆண்: நல்ல மனநிலையில் உள்ள ஒரு மைனராக இல்லாத, இந்துவாக உள்ள ஒரு ஆண்மகன் தத்து எடுக்கலாம். திருமணம் ஆனவர் எனில் அவரது மனைவியின் சம்மதம் பெற்ற பின்பே தத்தெடுக்க இயலும்.

ஒரு வேளை மனைவி திருமணம் பந்தம் துறந்து, துரவரம் மேற்கொண்டால் அல்லது வேறு மதத்திற்கு மாறினாள், அல்லது மனநிலை சரியில்லாதவர் என்று ஒரு நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டால்- அத்தகைய மனவையின் சம்மதம் இன்றி ஒரு ஆண் தத்தெடுக்காலம்.

பெண்: நல்ல மனநிலையில் உள்ள மைனர் இல்லாத இந்துவாக உள்ள ஒரு பெண்,
கீழ் கண்ட சூழ்நிலையில மட்டுமே சட்டப்படி ஒரு குழந்தையை சுவீகாரம் எடுக்க முடியும்.

1. அவர் திருமணமாகாதவர்
2. திருமணமாகி விவாகரத்து பெற்றவர் அல்லது கணவனை இழந்தவர்.

3. திருமணமாகி பெண்ணின் கணவர் இந்துவாக இல்லாமல் வேறு மதத்தைத் தழுவியவர், துரவரம் பூண்டவர் அல்லது ஒரு நீதிமன்றத்தின் வாயிலாக மனநிலை சரியில்லாதவர் என்று அறிவிக்கப்பட்டவர்.

## தத்து கொடுக்கத் தகுதி பெற்றவர்:

குழந்தையின் தந்தை, தாய், பாதுகாவலர் ஆகியோர் முறையே சுவீகாரம் கொடுக்கத் தகுதி பெற்றவர். தந்தை, தாயின் சம்மதத்துடன் மட்டுமே தத்துக் கொடுக்கலாம்.

## கீழ்கண்ட சூழ்நிலையில் பெற்றோரின் சம்மதம் அவசியமில்லை:

தாய் துரவரம் பூண்டுவிட்டார், மனநிலை சரியில்லாதவர் என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர், தாய் கணவனை இழந்தவர் அல்லது மேற்சொன்ன அதே காரணங்களால் ஒரு தந்தை சுவீகாரம் கொடுக்க இயலாத நிலையில் இருக்கும் போது, குழந்தையின் தாய் சுவீகாரம் கொடுக்கலாம். கார்டியன் அல்லது காப்பாளர் என்பவர் ஒரு குழந்தையை முழுமையாக தன் பொறுப்பில் வைத்து வளர்ப்பவர், அதன் சொத்துக்களுக்குப் பாதுகாவலராக இருப்பவர் மற்றும் பெற்றோர்களின் உயில் மூலம் அமர்த்தப்பட்டவர் அல்லது தகுந்த நீதிமன்றத்தின் வாயிலாக அறிவிக்கப்பட்டவர். அத்தகைய காப்பாளர் தன்வசம் உள்ள குழந்தையைத் தத்துக் கொடுக்கும் போது ஒரு நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறுதல் அவசியம்.

## சுவீகாரமாகக் கொடுக்கப்படுவர்:

1. இச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்துக்கு உட்பட்ட இந்துவாக இருப்பவர்.
2. ஏற்கனவே சுவீகாரம் கொடுக்கப்படாதவர்.
3. திருமணமாகாதவர்
4. 15 வயது நிரம்பாதவர்

திருமணமானவர், 15 வயதுக்கு மேற்பட்டவர் ஆகியோரைத் தத்துக் கொடுப்பதை ஒரு நடைமுறை வழக்கமாக கொண்டுள்ள சமூகத்தினருக்கு விதிவிலக்கு உண்டு. உதாரணமாக நம் தமிழ்நாட்டில் நாட்டுக்கோட்டைச் செட்டியர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இந்த விதிவிலக்கு உண்டு.

## இதரவிதிகள்:

ஒரு ஆண் குழந்தையைத் தத்தெடுப்பதற்கு உயிருடன் உள்ள மகன், மகன் வயிற்றில் பிறந்த மகன் அல்லது அத்தகைய பேரனின் மகன் இருத்தல் கூடாது. ஒரு குழந்தையைத் தத்தெடுப்பதற்கு உயிருடன் உள்ள மகள் அல்லது மகன் வயிற்றில் பிறந்த மகள் இருத்தல் கூடாது.

ஒரு மகளைத் தத்தெடுக்கும் போது, தத்தெடுக்கும் தந்தைக்கும் மகளுக்கும் இடையே குறைந்தபட்சம் 21 வயது வித்தியாசம் இருத்தல் வேண்டும். ஒரு மகனைத் தத்தெடுக்கும் போது தத்தெடுக்கும் தாய்க்கும், மகனுக்கும் குறைந்தபட்சம் 21 வயது வித்தியாசம் வேண்டும்.

சட்டப்பிரிவு 17-ன் படி ஒரு குழந்தையைத் தத்துக் கொடுப்பதற்காக எவரும், பணம் அல்லது வேறு எந்த ஆதாயமும் பெறவோ, கொடுக்கவோ கூடாது.

## தத்து எடுப்பதால் ஏற்படும் சட்ட விளைவுகள்:

ஒரு குழந்தைத் தத்துக் கொடுத்த பின் அது பிறந்த குடும்பத்திற்கும் அதற்கும் உறவு முற்றிலும் துண்டிக்கப்படுகிறது. தத்து எடுத்த குடும்பத்தில் ஒரு வயிற்றில் பிறந்த குழந்தைக்கு உண்டான அனைத்து உரிமைகளும், அந்தஸ்தும் பெறுகிறது. தத்தெடுத்த தாய், தந்தை வழி சொத்து, குடும்ப பரம்பரை சொத்து, குடும்பப் பெயர் அனைத்திலும் அதற்கு உரிமை உண்டு. தத்துக் கொடுப்பதற்கு முன் ஒரு குழந்தையின் பேரில் சொத்துக்கள் ஏதும் இருப்பின், அச்சொத்துக்கள் மீதான உரிமை தொடரும். தத்து எடுக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள சொத்துக்கள் வேறு எவருக்கோ முறைப்படி கொடுக்கப்பட்டிருந்தால், அதைத் திரும்பப் பெற அக்குழந்தையால் முடியாது. பிறந்த குடும்பத்துடனான உறவு முற்றிலும் துண்டிக்கப்பட்ட போதும், திருமணம் செய்யத் தடையாக இருக்கும் சில ரத்த சம்பந்தப்பட்ட உறவு முறையில் திருமணம் செய்ய அக்குழந்தைக்குத் தடை உண்டு.

ஒரு ஆண் தத்து எடுத்த பின் திருமணம் செய்தால், அவரது மனைவி, அக்குழந்தையின் மாற்றாந்தாய் என்னும் அந்தஸ்தைப் பெறுவார். ஒரு பெண் தத்து எடுத்த பின் திருமணம் செய்தால் அவரது கணவர், அக்குழந்தைக்கு மாற்றுத் தகப்பனாகக் கருதப்படுவார்.

குறிப்பு:

மாற்றுத்தாய், மாற்றுத் தகப்பனிடம் ஒரு குழந்தை சொத்துரிமை கொண்டாட முடியாது. ஜீவானம்சம் கோர முடியாது. அதேபோல் அவர்களும் வயோதிக காலத்தில் இக்குழந்தையிடம் ஜீவனாம்சம் கோர முடியாது.

ஒரே குழந்தையை ஒன்றுக்கு மேற்பட்டவர் தத்தெடுக்க முடியாது.

## இளைஞர் நீதி (குழைந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2015.

இது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட சிறார்கள், ஆகியோருக்காக இயற்றப்பட்டுள்ள விரிவான ஒரு சட்டம். இதே சட்டத்தில் ஒரு இந்திய குழந்தையை தத்து எடுப்பதற்கான விரிவான சட்டப் பிரிவுகளும் உள்ளன. சாதி, மத வேறுபாடின்றி, தத்தெடுக்க விரும்பும் அனைத்து தரப்பு பெற்றோருக்கும் ஏதுவான ஒரே சட்டம் இது என்றும் கூறலாம். ஆனால் அதே சமயத்தில் தத்து கொடுக்கக் கூடிய எல்லா குழந்தைகளுக்கும் இச்சட்டம் பொருந்துமா என்று கேட்கும்பட்சத்தில் இல்லை என்றே சொல்ல வேண்டும். இது குறித்து பின்னர் பார்க்கலாம்.

சட்டப்பிரிவு-56(1)ன் படி ஆதரவற்ற நிலையில் கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை தத்தெடுக்க இச்சட்டத்தில் முழு அனுமதி உண்டு.

சட்டப்பிரிவு-52(2)ன் படி ஒரு உறவினரின் குழந்தையை தத்தெடுக்க இயலும். அதற்கு உறவினர் என்பவர் யார்? என்பதற்கான விளக்கம், சட்டப்பிரிவு 2(52)ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு குழந்தைக்கு தந்தை வழி உடன்பிறந்தவர்கள் அதாவது பெரியப்பா, சித்தப்பா, அத்தை தாய் வழி உடன்பிறந்தவர்கள் மாமன், பெரியம்மா அல்லது சித்தி மற்றும் தாய் அல்லது தந்தை வழி தாத்தா பாட்டி, ஆகியோர் மட்டுமே “உறவினர்” என்ற வரையறைக்குள் வருவர். அத்தகைய நபர்களுக்கு மட்டுமே ஒரு பெற்றோர் தங்கள் குழந்தையை இச்சட்டத்தின் கீழ் தத்து கொடுக்க இயலும். இத்தகைய தத்தெடுப்பு ஒரு உள்நாட்டு தத்தெடுப்பாகவோ அல்லது அயல்நாட்டு தத்தெடுப்பாகவோ இருக்கலாம்.

உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு தத்தெடுப்புகளுக்கு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை விதிகள் சட்டப்பிரிவுகள்-58,59ல் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் முந்தைய அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளன.

எனவே இச்சட்டத்தின் கீழ் தத்து கொடுக்கக் கூடிய குழந்தை என்பது ஒரு கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையாக இருத்தல் வேண்டும் அல்லது இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்ட உறவு முறையில் உள்ள குழந்தையாக இருத்தல் வேண்டும். இது தவிர ஒரு பெற்றோர் நேர்முகமாக தங்கள் குழந்தையை தாங்கள் விரும்பும் நண்பர்கள் அல்லது இதர உறவினர்களுக்கு தத்து கொடுக்க விரும்பினால் இச்சட்டத்தின் கீழ் அனுமதி இல்லை.

## இச்சட்டத்தில் காணும் இதர அம்சங்கள்:

தத்தெடுப்பு ஆணைக்காக நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கும் போது அத்தகைய வழக்குகளை நீதிமன்றங்கள் தனி அறையில் விசாரித்தல் வேண்டும்.

நீதிமன்றங்கள் ஆணை பிறப்பிக்கும் முன், குழந்தையின் நன்மை கருதியே தத்தெடுப்பு நடைபெறுகிறது மற்றும் உறவினர் தத்து கொடுத்தலில், தத்தெடுப்போரிடம் இருந்து இயற்கை பெற்றோர் பணம், சொத்து என்று எந்தவிதமான சன்மானமும் பெறவில்லை என்பதனை ஊர்ஜீதம் செய்தல் வேண்டும்.

சட்டப்பிரிவு-63ன் படி, ஒரு தத்தெடுத்த குழந்தைக்கு, அதன் தத்து பெற்றோருக்கு வயிற்றில் பிறந்த ஒரு குழந்தைக்கு கிடைக்கக் கூடிய சட்டரீதியான எல்லா உரிமைகளும் கிடைப்பதுடன், அதன் இயற்கை பெற்றோர் குடும்பத்தில் இருந்து அது முழுவதும் துண்டிக்கப்படுகிறது. ஆனால் தத்தெடுப்பதற்கு முன்பே அதன் பேரில் சொத்துக்கள் இருக்கும்பட்சத்தில், அச்சொத்துக்கள் மீதான உரிமை தொடரும்.

ஒரு இந்திய குழந்தையை தத்தெடுக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் அனைத்தையும் நாம் பார்த்தோம். இத்தகைய நடைமுறை விதிகளை கடைப்பிடித்தல், சட்ட ரீதியான தத்தெடுப்பிற்கு மிகவும் அவசியமானது. அதை தவிர்த்து அச்சட்ட விதிமுறைகளை பின்பற்றாது இயங்குபவர்களுக்கு உரிய தண்டனைகளும் “இளஞைர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2015”-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை கீழே காணலாம்.

## சட்டத்தை மீறுவோருக்கு உண்டான தண்டனைகள்:

### கொடுக்கப்பட்ட சட்ட விதிகளை பின்பற்றாது குழந்தையை தத்து கொடுக்க நினைக்கும் நபர்கள்/அமைப்புகள்:

- கொடுக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றாது ஒரு குழந்தையை தத்து கொடுக்கும் அல்லது ஒரு ஒப்படைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட குழந்தையை வாங்கும் நபர்கள் / அமைப்புகள் மூன்று வருட காலம் வரை நீட்டிக்கக் கூடிய சிறை தண்டனை / கடுங்காவல் சிறை தண்டனை அல்லது ரூ.10,000 அபராதம் அல்லது இரண்டுமே வழங்கப்படும். (சட்டப்பிரிவு-80)

## தண்டனைக்குரிய இதர சட்டப்பிரிவுகள்:

ஒரு கைவிடப்பட்ட குழந்தையை கண்டெடுத்த பின், யாருக்கும் சொல்லாமல் தன்வசம் வைத்திருக்கும் தனிநபர்கள், அமைப்புகள், தாய் சேய் நல மருத்துவமனைகள் ஆகியவை மேலும் இவ்விதம் பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளை குறித்த தகவலை, சைல்டுலைன் அமைப்பு, காவல்துறை, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு, குழந்தை நல குழுமம், ஆகியோருக்கும் தகவல் தெரிவிக்காதவர்கள் அல்லது பதிவு பெற்ற குழந்தை பராமரிப்பு இல்லங்களில் ஒப்படைக்காதவர்கள், ஆகியவர்களுக்கு 6 மாத காலம் வரை நீடிக்கக் கூடிய சிறைத்தண்டனை அல்லது ரூ.10,000 அபராதம் அல்லது இரண்டுமே வழங்கப்படும்.

(சட்டப்பிரிவு-34)

சட்டரீதியாக தத்துகொடுக்க ஏதுவான குழந்தைகளை தன் வசம் வைத்திருக்கும், குழந்தை பராமரிப்பு இல்லங்கள், அத்தகைய குழந்தைகள் தத்து கொடுக்கப்பட அருகில் உள்ள சிறப்பு தத்து நிறுவனத்தை அணுகாமல், தாங்களும் எந்த முயற்சியும் எடுக்காமல் அந்த குழந்தைகள் தங்களிடமே தொடர்ந்து வசிக்க அனுமதிக்கும் பட்சத்தில் ஒரு குழந்தைக்கு ரூ.50000 வரையிலான அபராதம் விதிக்கப்படும், தொடர் நடடிவடிக்கையாக இச்செயலை புரியும் இல்லங்கள் இயங்க அனுமதி மறுக்கப்படும்.

(சட்டப்பிரிவு-66(3))

நம்நாட்டை பொறுத்த வரைக்கும் அனைத்து பெற்றோருக்கும் தாங்கள் விரும்பும் குழந்தையை சட்டரீதியாக தத்தெடுக்க இயலுமா என்பது இன்னமும் கேள்விக்குறியாக உள்ளது என்று நான் முன்பே குறிப்பிட்டுள்ளேன்.

வெகுகாலமாக இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம்-1955 மாத்திரமே அமுலில் இருந்த காரணத்தால் இந்துக்கள் அல்லாது பிற மதத்தைச் சார்ந்த குடிமக்கள் சட்டரீதியாக ஒரு குழந்தையை தத்தெடுக்க இயலாத ஒரு சூழ்நிலை இருந்து வந்தது. சமீபத்தில் 2015-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் கொண்டுவரப்பட்ட பல சட்டப்பிரிவுகள் வாயிலாக, அனைத்து மதத்தினரும் தத்தெடுக்க வாய்ப்பு அளிக்கப்பட்டது. இருந்த போதும் தத்தெடுக்கப்படும் குழந்தைகள் என்று சொல்லும் போது, கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் அல்லது சட்டம் அனுமதிக்கும் உறவுமுறையில் உள்ளவர்களின் குழந்தைகள் மட்டுமே இச்சட்டத்தின் கீழ் தத்தெடுக்க இயலும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சட்டம் அனுமதிக்காத இதர உறவினர்களின் அல்லது தனக்கு தெரிந்த நண்பர்கள் ஆகியோரின் குழந்தைகளை தத்தெடுக்க விரும்பும் தத்து பெற்றோர்களும் உள்ளனர். அத்தகையோர் இந்து மதத்தை சார்ந்தவர்களாக இருப்பின், இந்து சட்டத்தின் கீழ் சட்டரீதியாக தத்தெடுக்க இயலும். மாறாக அவர்கள் இந்துக்கள் அல்லாத பிற மதத்தை சார்ந்தவர்களாக இருப்பின் அவர்கள் தாங்கள் விரும்பும் குழந்தையை சட்டரீதியாக தத்தெடுக்க இயலாத சூழ்நிலையே இன்றும் உள்ளது. அத்தகையோர் "பாதுகாவலர் மற்றும் பாதுகாக்கப்படுவோர் சட்டம் 1890-ம்" கீழ் அக்குழந்தையின் "பாதுகாவலர் என்ற உரிமையை" மட்டுமே கேட்டு பெற முடியும்.

ஆனால் அத்தகைய ஆணையை குழந்தையின் இயற்கை பெற்றோர் எப்பொழுது வேண்டுமானாலும் திரும்பப் பெற இயலும், மற்றும் "பாதுகாவலர்" என்ற அந்தஸ்து, அக்குழந்தைக்கு 21 வயது வரை மட்டுமே நீடிக்கும். குழந்தைக்கு அத்தகைய நபர்களின் சொத்தில் பங்கு கேட்க உரிமை இல்லை.

அத்தியாயம்



# 6

# நீதிமன்ற ஆணை

# நீதிமன்ற ஆணை

நம் மாநிலத்தை பொறுத்தவரை, சில இடங்களில் குடும்ப நீதிமன்றங்களும், இதர இடங்களில் மாவட்ட நீதி மன்றங்களும் தத்தெடுப்பு வழக்கை விசாரிக்கின்றன. நீதிமன்றங்கள் விண்ணப்பிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள கால அவகாசத்திற்குள் ஆணை பிறப்பித்தல் வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல் படி "தத்தெடுப்பு கூராய்வு நிறுவனத்தின்" (Adoption Scrutiny Agency) கருத்தை கேட்டறிதல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## தத்தெடுப்பு கூராய்வு நிறுவனம் (Adoption Scrutiny Agency) :

இந்திய குழந்தை தத்தெடுப்பு என்று வரும் போது, முக்கியமாக ஆதரவற்ற குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்குடன் பலதரப்பட்ட நெடிய நடைமுறை விதிகள் சொல்லப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் ஒரு மனுதாரர் ஒரு தத்தெடுப்பு ஆணைக்காக நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கும் போது, அந்த தத்தெடுப்பில் சட்டம் மற்றும் அரசு ஆணையில் சொல்லப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளும் நேர்மையுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதனை ஆராய்ந்து உணரும் அவகாசம் நீதிமன்றங்களுக்கு இல்லாமல் போகலாம். மேலும், ஒரு தத்தெடுப்பு வழக்கில் ஒரு வழக்கறிஞர் மட்டும் தத்து பெற்றோர் சார்பாக வாதாடுவார், ஆனால் தத்தெடுக்கப்படும் குழந்தை அல்லது அதன் இயற்கை பெற்றோர் ஆகியோர் சார்பாக யாரும் இருக்க மாட்டார்கள். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டே, உச்சநீதிமன்றம் *"லஷ்மிகாந் பாண்டே (எதிர்) மத்திய அரசு"* என்னும் வழக்கில் வழங்கிய தீர்ப்பில், நீதிமன்றங்கள், தத்தெடுப்பில் ஈடுபடாத ஒரு சமூக அக்கறை கொண்ட நிறுவனத்தை "தத்தெடுப்பு கூராய்வு நிறுவனமாக" அங்கீகரித்து தத்தெடுப்பு வழக்குகளில், அவர்களது ஆய்வு அறிக்கை கேட்டுப் பெற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. "இந்திய குழந்தைகள் நலச்சங்கம்" மற்றும் "இந்திய சமூக நலச்சங்கம்" என்னும் இரண்டு தேசிய அளவிலான அமைப்புகள் மற்றும் அவர்களது மாநில அமைப்புகள் ஆகியவற்றை இச்செயலுக்காக பயன்படுத்தலாம் என்றும் கூறியுள்ளது.

இந்த தீர்ப்பின் படி அயல்நாட்டு தத்தெடுப்புகளில் "கூராய்வு அறிக்கை" கேட்டுப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டது.

உள்நாட்டு தத்தெடுப்பை பொறுத்தவரை, அவை பரிந்துரையாக சொல்லப்பட்டுள்ளது.

## ஒரு தத்து கூராய்வு நிறுவனத்தின் பணிகள்:

நீதிமன்ற ஆணை கிடைத்தவுடன், நீதிமன்றத்தில் சமர்பித்த அனைத்து ஆவணங்களின் நகல்களை பெற்று ஆய்வு செய்தல் வேண்டும்.

உள்நாட்டு தத்தெடுப்பு எனில் குழந்தை தத்து பெற்றோருடன் ஒரு இடைக்கால வளர்ப்புரிமை உடன்படிக்கை மூலம் வளர்ந்து வரும், அக்குழந்தையை நேரில் சந்தித்து, ஒரு அரவணைப்பான குடும்ப சூழலில் குழந்தை உள்ளதா என்பதனை அறிவர்.

- பின்னர் இத்தகைய தத்தெடுப்பில் சொல்லப்பட்டுள்ள அனைத்து வழிமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளதா? ---
- குழந்தை சட்டரீதியாக தத்து கொடுக்க தகுதி வாய்ந்த குழந்தைதான் என அறிவிக்கப்பட்டுள்ளதா? ---
- குழந்தையின் தத்து பெற்றோர் குழந்தையை வளர்க்கும் திறம் பெற்ற பெற்றோர்தானா? ---
- இத்தகைய தத்தெடுப்பு அக்குழந்தைக்கு ஒரு சீரிய நன்மையாக அமைய வாய்ப்புண்டா? ---

ஆகிய அனைத்து தகவல்களும் அடங்கிய தனது அறிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கும்.

இத்தகைய அறிக்கை சமர்பிக்க இரண்டு வாரத்திற்கு மேல் தகுந்த காரணம் இன்றி அவகாசம் எடுத்தல் கூடாது.

## முடிவுரை:-

உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும், பெற்றோர் மற்றும் குடும்பம் என்பது இன்றியமையாத ஒன்று. அதே போல் ஒரு குழந்தையை தத்தெடுத்தல் அல்லது தத்து கொடுத்தல் ஆகியவையும் தத்து பெற்றோர் மற்றும் இயற்கை பெற்றோர் ஆகியோரின் வாழ்நாளில் மாற்ற முடியாத முக்கிய நிகழ்வாக அமைகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த செயல்பாடு சட்டத்திற்கு உட்பட்டு, சொல்லப்பட்டுள்ள நடைமுறை விதிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் மிக அவசியம்.

இந்த புத்தகத்தின் குறிக்கோள் இது போன்ற தத்தெடுப்பில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உதவிகரமாகவும் மற்றும் வழிகாட்டுதலாகவும் இருத்தல் வேண்டும் என்பதாகும்.